# சுதந்திரன்

SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12.



தாமரைப்பூ மார்க் சந்தனாதித்தைலம்

லட்சக்கணக்கான மக்களின் ஆதரவைப்பெற்றது நறுமணமுடையது எங்கும் கிடைக்கும்.

முழு இலங்கைக்கும் சோல் ஏஜண்ட்:-
ஈ. ஹைதரலி & பிரதர்ஸ்
22, 2/7 ஆதமலி பில்டிங், கொழும்பு 11.


புத்தகம் 6 நந்தன ஸ்ரீ கார்த்திகைமீ 8உ [23-11-52] ஞாயிற்றுக்கிழமை ரபீயுல் அவல்பிறை 5 இதழ் 25

# ★ மந்திரியின் பிரயாணச்செலவு மாதம் ரூ 700?

## பொக்கிஷ இலாகாவின் அதிருப்தி

### மந்திரிசபை வரையறுத்துள்ள செலவுகள்!

(நமது நிருபர்)

ஒரு மந்திரியின் பிரயாணச் செலவைக் குறித்து பொக்கிஷ இலாகா அதிருப்தி தெரிவித்திருக்கிறதாம். மந்திரிகளின் பிரயாணச் செலவு சம்பந்தமாக மந்திரி சபை செய்துள்ள முடிவுக்கு பிரஸ்தாபச் செலவு முரணாக இருப்பதால், அது சட்ட பூர்வமானதல்ல எனக் கருதப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் மேற்படி மந்திரியின் பிரயாணச் செலவு ரூ 700 க்கு மேல் ஆகிறதென்று நம்பப்படுகிறது. இதர மந்திரிகளின் பிரயாணச் செலவுகள் மாதம் ரூ 300க்கு குறைவாகத்தான் இருக்கின்றனவாம்.

பிரஸ்தாப மந்திரியின் பிரயாணச் செலவுகளில் பல அவருடைய சொந்தத் தொகுதிக்குப் போய்வந்ததில் ஏற்பட்ட செலவுகள் என்று மந்திரி அலுவலகத்திற்கு நெருங்கிய ஒரு அதிகாரி கூறினார்,

மந்திரிகளின் பிரயாணச் செலவுகளைப்பற்றி மந்திரி சபை செய்துள்ள முடிவுக்கிணங்க இது சட்டபூர்வமானதல்ல என்று கருதப்படுகிறது. பிரயாணச் செலவு சம்பந்தமாக மந்திரியின் முடிவு கூறுவதாவது:

ஒரு மந்திரி அல்லது பாராளுமன்றக் காரியதரிசி கீழ்க்காணும் காரணங்களை முன்னிட்டு செல்லும் பிரயாணங்கள் உத்தியோகபூர்வமான பிரயாணங்களாகும்

(1) மந்திரி அலுவலக காரியங்கள் சம்பந்தப்பட்ட பிரயாணங்கள்.

(2) பொதுஜன ஸ்தாபனங்களின் அழைப்பு, மந்திரி அலுவலகத்தில் பொது நடவடிக்கைகளுக்கு மந்திரியுடன் செல்லுதல், மந்திரி அல்லது குறிப்பிட்ட ஒரு தொகுதியின் பிரதிநிதியினது வேண்டுகோளின்படி ஏற்பாடு செய்யப்பட்ட பொதுஜன ஏற்பாடுகள் ஆகிய விஷயங்களுக்காக பிரயாணங்கள்.

(3) அயல் நாட்டு ஸ்தானிகர் காரியாலயங்களால் விசேஷ விருந்தாளிகளைச் சந்திக்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பொது வரவேற்புகளுக்குச் செல்லுதல்.

(4) மந்திரி, அல்லது பாராளுமன்றக் காரியதரிசி என்ற ஹோதாவில் தனது தொகுதியில் பிரயாணம் செய்தல்.

## ஆள் கணக்கெடுப்பதின் இரகசியம்

### கூப்பன் இல்லாதவர்கள், தவற விட்டவர்கள் மீது நடவடிக்கை?

இம்மாதம் 28ந் தேதி ஆள் கணக்கெடுப்பு நடைபெறுகிறது. இதனால் சட்ட விரோதமாக அரிசிக் கூப்பன் வாங்கியிருப்பவர்களைக் கண்டுபிடித்து விடுவார்களென்றும் அவர்கள்மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்குமென்றும் தெரிகிறது.

இந்தியாவுக்குபணம் அனுப்புவதற்காக ரேஷன் புத்தகங்களை ஒழுங்கீனமாக உபயோகித்த இந்திய வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்தக் கணக்கெடுப்பு உதவியாக இருக்குமாம்.

சிலரிடம் அரிசிக் கூப்பன் இல்லாமலிருக்கலாம். சிலர் கூப்பன் புத்தகங்களையே தவறவிட்டிருக்கலாம் அரிசிக் கூப்பன் இல்லாமலிருப்பதற்கும் காணமற்போனதற்கும் சரியான காரணம் காட்டி நிரூபிக்க முடியவில்லையானால அவர்கள் மீதும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமெனத் தெரிகிறது

புதிய அரிசிக் கூப்பனைக் கொண்டு இனிமேல் இந்தியாவுக்கு பணம் அனுப்ப முடியாது.

## மீண்டும் சத்தியாக்கிரகமா?

### அல்லது நேரடி நடவடிக்கையா!

இந்தியாவுக்குச் சென்ற காங்கிரஸ் தூதுகோஷ்டியினரில் திருவாளர்கள் ராஜலிங்கமும், தொண்டமானும் கடந்த செவ்வாய்க்கிழமையன்று இலங்கைக்குத் திருப்பிவிட்டார்கள். ஜனாப் அஸீஸ் கராச்சியிலிருந்து இன்று வருவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் இ. இ. காங்கிரஸ் காரியக் கமிட்டிகூடி நிலைமையை ஆராயுமென்று தெரிகிறது.

மீண்டும் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்படுமா, அல்லது ஒரு மாபெரும் பொது வேலை நிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அவர்கள் கேட்கத் தொடங்கிவிட்டனர். இந்திய சர்க்காரின் ஆதரவு நமக்குத் தேவை என்றாலும் இந்தியாவே பிரச்னையைத் தீர்த்து விடுமென்று எதிர்பார்ப்பது சரியல்லவென்றும் இ இந்தியர் தங்களின் பிடிவாதமான உரிமைப் போராட்டத்தின் மூலமாகவே பிரச்னைக்கு முடிவுகாண முடியுமென்றும் விஷயம் தெரிந்தோர் கூறுகின்றனர்

"இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நாங்கள் சரக்கு மூடைகளல்ல" என்று திரு தொண்டமான் சென்னையில் பத்திரிகை நிருபரிடம் கூறியது போராட்டம் ஆரம்பிக்கப்படுவதின் அறிகுறிதான் என்று அரசியல் வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

## அரசாங்க காலி ஸ்தானங்கள்

### சுகாதாரப் பகுதி

N. 3538 ஆறு மாத பயிற்சியின் பின் அவசரகால தாதியாக நியமனம் பெற விரும்பும் பெண்கள் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை 15-11-52ல் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும்படி (அ) கொழும்பு ஆஸ்பத்திரிகள் (ஆ) கண்டி (இ) காலி (ஈ) குருநாகல் (உ) யாழ்ப்பாணம் (ஊ) வதுளை (எ) இரத்தினபுரி (ஏ) மேல் மாகாணம் முதலான பெரும் பிரிவு வைத்திய அதிகாரிக்கு அனுப்பவேண்டும். விண்ணப்பதாரர் தமிழிலேனும் சிங்களத்திலேனும் ஆங்கிலம் ஒரு பாடமாக அல்லது ஆங்கிலத்திலேனும் கனிஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாய் 18 வயதுக்கு குறையாதவர்களாயும் 30 வயதுக்குக் கூடாதவர்களாயும் இருக்க வேண்டும். ஆறு மாதப் பயிற்சியில் சித்தியடைந்த பின் நியமனம் அளிக்கப்படும். கீழ்க்காணும் ஆஸ்பத்திரிகளில் இப்பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் மாணவர் தம் வீட்டிலிருந்து பயிற்சி வகுப்புகளுக்கு தினந்தோறும் செல்ல வேண்டும். அவர்களுக்கு இது சம்பந்தமாகச் சில்லறைச் செலவிற்காகப் பணம் கொடுக்கப்படும். அவசரகால தாதியாக நியமனம் பெற்ற பின் நிரந்தர தாதி சேவையிற் சேருவதற்குவேண்டிய பயிற்சி அளிக்கப்படும். முழு விபரத்தையும் 21-11-52 அரசாங்க கசற் பத்திரிகையில் காணலாம். இப்பத்திரிகைகளை அவ்வூர் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியிடமிருந்து அல்லது தபாற் கந்தோர்களில் பெற்றுக் கொள்ளலாம். கீழ்க்காணும் ஆஸ்பத்திரிகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்:-

லேடி ஹெவ்லொக் ஆஸ்பத்திரி கொழும்பு, தொற்று நோய் ஆஸ்பத்திரி, அங்கொடை, போகவந்தலாவை, லிண்டுல, கண்டி, டெல்டெனியா, அக்ரபத்தான, மடுல்க்கல, டொலஸ்பாகே, டெல்ரோற்ரு, டிக்கோயா, நாவலப்பிட்டி, றம்பொட, டிம்புள்ள, கம்பளை, டிஸ்செலாவை, நுவரெலியா, மஸ்கெலியா, காலி, மாத்தறை, வலஸ்முல்லா, பலப்பிட்டி, டெனியாய, தங்காலை, அம்பாந்தோட்டை, எல்பிட்டி, சிலாபம், டம்புள்ள, கிரியுல்ல, குழியாப்பிட்டி, குருநாகல், மாறவில, மாத்தளை, புத்தளம், யாழ்ப்பாணம் சாவகச்சேரி, அனுராதபுரம், கிளிநொச்சி மன்னார், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, வதுளை, பலாங்கொடை, காவத்தை, இரத்தினபுரி, கறவனெல்ல, கேகாலை, மொறட்டுவை, இங்கிரியா, ருகமம் கிளை ஆஸ்பத்திரி, களுத்துறை, கம்பகா, நீர்கொழும்பு, கொறன, வதுப்பிற்றிவெல, பாணந்துறை, மிரிகாமம், அவிசாவெல்லை, பிம்புரு.

## இலங்கை இந்தியர்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறுகின்றனர்

### ஹைகமிஷனர் காரியாலயத்தில் மனுக்கள் குவிகின்றன.

கடந்த இரு வாரங்களாக ஏராளமான இலங்கைவாழ் இந்தியர்கள் இந்தியாவுக்கு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். ரெயில் டிக்கட் வாங்குவதற்காக அவசரகால அத்தாட்சிப் பத்திரம் கொடுக்குமாறு கோரி ஏராளமான மனுக்கள் இந்திய ஹை கமிஷனர் காரியாலயத்தில் வந்து குவிகின்றன.

இந்த "இந்தியப் பிரயாணம்" தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தினந்தோறும் சுமார் 200 அவசரகால அத்தாட்சி பத்திரம் கொடுக்கப்படுவதாக இந்திய ஹை கமிஷனர் காரியாலய அதிகாரி ஒருவர் கூறினர்.

இந்தியாவுக்குப் போவதற்காக அரிசிக் கூப்பன்புத்தகங்களை கொண்டு வந்து ஒப்படைப்பவர்களின் தொகை அதிகரித்திருப்பதாக உணவு இலாகா அதிகாரி ஒருவரும் ஊர்ஜிதம் செய்தார்.

ரேஷன் புத்தகம் இல்லாதவர்கள் இந்திய ஹை கமிஷனருக்கு ஒரு சத்தியக் கடுதாசியைச் சமர்ப்பித்தால் அவர்கள் இந்தியாவுக்குப் போவதற்காக டிக்கட் வாங்க அனுமதிக்கும்படி ஹை கமிஷனர் சிபார்சு செய்யலாமென்று உள்நாட்டு மந்திரி அலுவலகம் கூறியிருப்பதை இலங்கை வாழ் இந்தியர்கள் பயன் படுத்தி[illegible] ஹை கமிஷனரின் சிபார்சின்மீது உணவு இலாகா அதிகாரிகள் அவர்களுக்கு டிக்கட் வாங்குவதற்காக 'சர்டிபிகேட்' கொடுக்கிறார்கள்.

சட்டபூர்வமான முறையில் அரிசிக் கூப்பன் வாங்கி வைத்திருப்பவர்களும் கூட தங்களின் கூப்பனை உணவு இலாகாவில் ஒப்படைக்கப் போவதால், சட்டவிரோதமாக அரிசிக் கூப்பன் வாங்கினவர்கள் என்று தங்களைக் கைதி செய்து தொந்தரவுபடுத்துவார்களென்று அஞ்சி கூப்பனைக் குப்பைத் தொட்டியில் எறிந்துவிட்டு, ஹை கமிஷனர் காரியாலயத்தின்மூலம் டிக்கட் வாங்கிக்கொண்டு இந்தியாவை நோக்கி ஓடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் ஒரு ஏடு

# பாரூக்கின் மாஜி மனைவி பரீதாவின் பரிதாப நிலை

## தன்னைத்தானே கைதியாக்கிக் கொண்ட மாதரசி

### அன்னைக்குப் புதல்வி வரைந்த உருக்கமான கடிதம்

எகிப்து ராஜா மன்னர் பாரூக்கின் மனைவியான—தற்போதைய மனைவி அல்ல; 1948ல் விவாகரத்துச் செய்யப்பட்ட மனைவி—பரீதாவைப்பற்றிய வரலாறுகள் பரம இரகசியமாக இருந்து வருகின்றன. பரீதாவுக்குப் பிறந்த மூன்று பெண்களும் தற்போது கேப்ரியில் இருந்து வரும் பாரூக்கிடமே இருந்து வருகின்றனர். ஆனால் எகிப்தில் தங்கியிருக்கும் அவருடைய மாஜி மனைவி பரீதா மட்டும் இதுவரை மௌனமாகவே ஒரு வார்த்தையும் கூறாமல் இருந்து வருகிறார். பரீதாவின் தகப்பனார் கூறுவதைக் கேளுங்கள்.

'பிரமிட்டுகள்' என்று கூறப்பட்டுவரும் மலைகளின் அருகே புத்தம் புதிய மாளிகையொன்று காலியாகக் கிடக்கிறது. மூன்று இளஞ் சிறுமிகள் வசிப்பதற்காகவென்றே இந்த உல்லாச மாளிகை கட்டப்பட்டது. மாளிகையைச் சூழ்ந்த வெட்டவெளிப் பூங்காவிலே மூன்று லாயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு குதிரைவீதம் மூன்று குதிரைகள் அவைகளில் கட்டப்பட்டிருக்கின்றன. மாளிகைக்குள் ஓர் அழகிய ஸ்நான சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. மூன்று பெண்களும் தங்களுக்கு இஷ்டமானபோது இதில் நீந்தி விளையாடலாம்.

இலேசான நீல நிறச் சலவைக் கல் பதிக்கப்பெற்ற ஒரு ஸ்நான அறை இந்த மாளிகையில் காணப்படுகிறது. படுக்கை அறையைச் சுற்றிலும் கண்ணாடிச் சுவர்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்த மாளிகையிலேயே சிறுவர்களின் வாசிகசாலை, சினிமா சங்கீத அறை மாளிகையைச் சுற்றிலும் மேல்மாடித் தாழ்வாரம் முதலியவைகளெல்லாம் அமைக்கப்பட்டிருந்தன. சுருக்கச் சொன்னால் அது ஒரு பூலோக சுவர்க்கம்போன்றுதான் விளங்கியது.

### ஐந்து லட்சம் ரூபாவுன் செலவு:

மேற்குறிப்பிட்ட மாளிகையைக் கட்டி முடிக்க ஐந்து லட்சம் ரூபா செலவிடப்பட்டது. இளவரசிகள் பெரியல் (15) வயது, பவ்ஸியா (12 வயது) பதியா (8 வயது) ஆகிய மூவரும்தான் பரீதாவின் புதல்விகள். ஒரு ஆண் பிள்ளையை பரீதா பெறாததன் காரணமாக அவளை மாஜி மன்னர் பாரூக் விவாகரத்து செய்துவிட்டாரென்று உலகம் கூறுகிறது. இளவரசிகளின் மாளிகையில் இருபது வேலைக்காரர்கள் இருக்கின்றனர். அவர்களுக்குத் தனி விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. பிரமிட் மலையைப் பார்ப்பதற்காகச் செல்லுவோர் எவரும் இந்த மாளிகையைப் பார்க்காமலும் கவனிக்காமலும் போக மாட்டார்கள். இன்று அந்த மாளிகை காலியாகவே வெறிச்சென்றிருப்பதானது பரீதாவைப் பாரூக் மன்னர் விவாகரத்து செய்த பரிதாப சம்பவத்தை நினைவூட்டிக்கொண்டிருக்கிறது.

பாரூக் மன்னரின் ஆட்சியின், ரபீல் அரண்மனைகளில் இளவரசிகளுக்கு இருந்து வந்த [illegible] பொழுதுபோக்கு வசதிகளை பரீதா தமது புதல்விகளுக்கு அளிக்க முடியவில்லை. விவாகரத்து நிபந்தனைப்படி இளவரசிகள் மூவரும் தங்கள் தந்தையுடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை 3 மணிமுதல் சூரியாஸ்தமனம் வரையில் மட்டுமே அந்த மூன்று இளவரசிகளும் தங்கள் தாயைப் போய் பார்க்கலாம்.

பிரமிட் மலையருகேயுள்ள மாளிகை இப்போது இளவரசிகளுக்குப் பயன்படாது போய்விட்டிருப்பதால் அந்த மாளிகையை விற்பனை செய்ய உத்தேசித்திருக்கிறாள் பரீதா. 1946-ம் வருஷத்தில் பாரூக் விவாகரத்து செய்ததுமுதல் தனது தமது மாளிகையைவிட்டு வெளிவராமல் தற்காப்பு காவலில் இருந்து வரும் பரீதா இப்போது பாரூக் நாடுகடத்தப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியும் இன்னும் தனது மாளிகையைவிட்டு வெளிவந்தபாடில்லை.

### வாழ்வு முடிவடைந்தது:

அழகான உருவம்; கூரிய கருமையான கண்கள் குறுகுறுப்பான பார்வை கோவைப் பழத்தையொத்த அதரங்கள்; முத்துக்கோர்த்தாற்போலுள்ள வெண்மையான பல்வரிசைகள் உள்ள நாரிமணி பரீதா, அந்நியரைப் பார்த்துப்பேச பெரிதும் வெட்கமும் கூச்சமும்கொள்ளுவார்.

ஒருசமயம் ஸிட்னி ரோடின் என்ற ஆங்கிலேயர் பரீதாவின் வாழ்க்கை முறையை நேரில் கண்டறியும் எண்ணத்துடன் பரீதாவைச் சந்திக்க அவருடைய நண்பரான யூசுப் ஜுல்பிகாரின் உதவியை நாடினர். அலெக்ஸாந்திரியாவிலிருக்கும் தமது புதல்விக்கும் இவ்விஷயத்தை ஜுல்பிகர் டெலிபோன்மூலம் அறிவித்தார். ஆனால் "நான் இதுகாறும் அனுஷ்டித்து வரும் மௌனத்தை மீற முடியாதென்று அவருக்கு கூறுங்கள். பகிரங்கமாக நான் சொல்லக்கூடிய விஷயமொன்றுமில்லை. என்னைப் பற்றியோ என் குழந்தைகளைப்பற்றியோ நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை" என்று பரீதா கூறினாள்.

பரீதாவின் தந்தையான ஜுல்பிகர் ஒரு மாஜி ஹைகோர்ட்டு நீதிபதி; ஈரானில் பாரூக்கின் ஸ்தானிகராக இருந்தவர் தோற்றத்தில் அசல் ஆங்கிலேயரை ஒத்திருப்பார் அவர். கண்களில் நீர் ததும்ப அவர் தமது குமாரியின் வார்த்தைகளில் பொதிந்த கருத்துக்களை விளக்கிக் கூறினார். அவர் கூறிய வார்த்தைகள் இவைதான்:

"பரீதா வாழ்வே முடிவடைந்துவிட்டது. மக்களின் சார்பில் ஒருவிதமான செயலையும் அவள் மேற்கொள்ளத் துணியவில்லை. பாரூக் என்ன செய்வாரென்பதை அவளுக்குத் தெரியாது. தனது புதல்விகள் அவர்களுடைய தகப்பனாருக்களித்துவரும் மதிப்பும் கௌரவமும் சிறிதளவுகூட பாதிக்கக் கூடிய வார்த்தையொன்றையும் பரீதா கூறியதுமில்லை; கூறப் போவதுமில்லை"

### பணமான வரலாறு:

பாரூக் இளைஞராக இருக்கையில் பரீதாவின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டார். பரீதா அவளுடைய பதினாறும் வயதில் 1939-ம் ஆண்டில் பாரூக்கை மணம் செய்து கொண்டார். மணமான சில வருஷங்களுக்குப் பின்னர்தான் பாரூக்கிற்கு மனக் கசப்பு ஏற்பட்டது.

இதற்குப்பின் பாரூக் தம் நடன சாலைகளிலிருந்தும் தலைநகரின் பானசாலைகளிலிருந்தும் பல பெண்களை இல்லக்கிழத்திகளாக வைத்துக்கொண்டார்.

1944-ம் ஆண்டிலே மூன்றாவது புதல்வி பிறந்த சில நாட்களுக்கெல்லாம் பரீதா மணவாழ்க்கை உறவை மறுத்தாள். அவளுடைய குடும்பத்தில் ஆண் சந்ததியில்லாதார் எவருமேயில்லையாதலால், பரீதா மட்டும் மணவாழ்க்கையில் தொடர்ந்து இருந்துவந்தால் ஒரு ஆண் குழந்தை பிறந்திருப்பான் ஆனால் அவள்தான் அரண்மனைச் சிறையில் தன்னைத்தானே கைதியாக்கிக் கொண்டு வெளியுலகுடன் தொடர்பில்லாத வாழ்க்கை நடத்துகிறாள்.

விவாகரத்துக்கு முன் அல்லது பின் பரீதா பல முறைகளில் பகிரங்கமாக வெளியில்

(11-ம் பக்கம் பார்க்க)


### 3 மணி நேரத்துக்குள் ரூ 80,000 இழந்தார்!

பாரூக்கின் சூதாட்டம்

இம்மாதம் 11ந் தேதி ரோம் நகரத்தில் எகிப்து தேசத்தின் மாஜி மன்னர் பாரூக் பந்தயம் வைத்து சீட்டாட்டம் ஆடியதில் 3 மணி நேரத்துக்குள் ரூ 80 000 இழந்தார். முடிதுறந்ததற்குப் பின் அவர் சீட்டாட்டம் ஆடியது இதுவே முதல்தடவை.

ரோம் நகரிலுள்ள ஒரு பொழுதுபோக்கு சங்கத்தில் அவர் மெம்பராகச் சேர்ந்து கொண்டு மேற்படி சீட்டாட்ட பந்தயத்தில் பங்கெடுத்துக் கொண்டார்.

தான் இப்பொழுது பரம ஏழை என்று பாரூக் சமீபத்தில் தான் நிருபர்களிடம் கூறினர்.



உலக வாலிபர் சங்கத் தலைவர்கள் சமீபத்தில் பிரிட்டனுக்கு விஜயம் செய்தபோது பிரிட்டிஷ் கல்வி மந்திரி [illegible] சந்தித்துப் பேசினார்கள்.

நீங்கள் ஓர்
ஒட்டகம் மார்க்
குடையை விரும்புவது ஏன்?




ரெஜிஸ்டர் நிர் 12386

நீடித்த உழைப்பிற்கும், உறுதிக்கும் உத்திரவாதம்
நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு பெறுமதிவாய்ந்தது

ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலார்க்கும் தேவையான குடைகளைத் தெரிவு செய்துகொள்ளலாம்.

இலங்கையில் எல்லோரும் விரும்புவது
ஒட்டகம் மார்க் குடைகளே!

வெளிநாட்டிலிருந்து புதிதாய் இறக்குமதி செய்யப்பட்ட
பாக்கர் ஜூனியர் பென்
சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

உங்களுக்கு வேண்டிய ஜவுளிகளுக்கு எங்கள் மாளிகைக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

வியாபாரிகளுக்கு விலையில் சலுகை உண்டு.

ஐக்கியா டிரேப்பரி ஸ்டோர்ஸ்
6, சைனாவீதி, கொழும்பு 11. போன்: 5113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் பெண் உறவைச் சித்தரிக்கும் ஐந்திணைச் சிறப்பு

## கருத்தொன்றிய காதலுக்கு தியாகம் ஒன்றிய அன்பே ஜீவநாடி

### காட்சிகள் மூலம் கருத்தை விளக்கும் அகத்துறைக் கவிதைகள்

**வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ. எல்**

உலகத்து உயிர்கள் யாவும் இன்பத்தையே நாடுகின்றன. இந்த இன்பம் சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும். சிற்றின்பத்தை உலக இன்பமெனவும் பேரின்பத்தைக் கடவுள் இன்பமெனவுங் கூறலாம். உலக இன்பத்தை அனுபவித்து அதன் நிலையின்மையை உணர்ந்த பின்பே என்றுமழியாத பேரின்பத்தை உயிர்கள் நாடுவதியல்பு. இந்த உலக இன்பங்களுக்குள்ளே ஒத்த தலைவனும் தலைவியுங்கூடி அனுபவிக்கும் காதலின்பமே மிகச் சிறந்தது. அனுபவிக்கும் இருவரும் தங்கள் உள்ளத்தால் உணர்ந்து இன்பம் அடைவதாலும், பிறருக்கு அவ்வின்பம் இத்தன்மையது என்று எடுத்துரைக்க முடியாதாகையாலும் அவ்வின்பத்தை 'அகம்' எனப் பழந்தமிழ் இலக்கியங்கள் போற்றின. இவ்வின்ப வாழ்வில் ஏற்படும் உணர்ச்சி வேறுபாடாகிய இரங்கல், ஊடல் முதலியவற்றைத் 'திணை' என்றனர். ஆகவே 'அகத்திணை' என்றால் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உளதாய காதல் ஒழுக்கம் எனப்படும். இந்த இன்பத்தை நுகர்ந்து நிலையாமைகண்டு, மனத்தூய்மை பெற்று அடைய விரும்பும் வீட்டினையும், அதற்குக் கருவியாகிய அறத்திறனையும், அறஞ்செய்தற்கு இன்றியமையாத பொருளினையும், அப்பொருளினைப் பாதுகாத்துப் பெருக்குவதற்கும் வாழ்வில் ஏற்படும் இடையூறுகளை நீக்குதற்கும் நிகழ்த்தப்படும் போரினையும் புறப்பொருள் என்றனர்.

#### காதல்

இன்று, காதல் வாழ்வின் ஒழுகலாறுகளை நம் முன்னோர் எவ்வாறு வகுத்துரைத்தனர் என்று பார்ப்போம். ஒரு தலைவனுக்கும் ஒரு தலைவிக்கும் இடையில் ஏற்படுங்காதலை ஒருபாற் காதல், ஒத்த காதல், ஒவ்வாக்காதல் என மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். ஒருபாற் காதலைக் கைக்கிளை என்பர். ஓர் ஆடவனிடத்தேனும், ஒரு பெண்ணிடத்தேனும் தனிப்பட்ட முறையில் ஏற்படுங் காதல் ஒருபாற் காமம் எனப்படும். ஒவ்வாக் காதல் என்பது தலைவன் தலைவியாகிய இருவரும் தம்மிடையே உண்மைக் காதலில்லாது வாழும் வாழ்க்கையே. இதனைப் பெருந்திணை என்பர். ஒத்த காதல் ஐந்து வகைப்படும். அவையாவன:-குறிஞ்சித் திணை, முல்லைத் திணை, பாலைத்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை என்பனவாம். முன்னே குறிப்பிட்ட கைக்கிளை பெருந்திணை என்னும் இரண்டுடன் இந்த ஐந்தும் சேர அகத்திணைகள் ஏழாகும். இவற்றுள், பல வழிகளில் ஒத்த தலைவனும் தலைவியுங் கூடி இன்ப வாழ்வு நடத்தும் நெறி ஐந்திணையேயாதலின், இந்த ஐந்திணையை அன்பின் ஐந்திணை எனப் புலவர் பெருமக்கள் போற்றினர். ஒருபாற் காதலும் பொருந்தாக்காமமும் ஆகிய கைக்கிளை பெருந்திணைகளைப்போலாகாது? பிறப்பு, ஒழுக்கம், வயது, உருவம், அன்பு, நிறை, அருள், அறிவு, செல்வம் முதலிய பல துறைகளிலே ஒத்த தலைவனும் தலைவியும் சேர்ந்து, ஈருயிர்க்கு ஓருடல் என வாழும் வாழ்க்கையாகையால், இந்த ஐந்திணை வாழ்வுக்கே நமது முன்னோர் நிலம் பொழுது முதலியவற்றை வகுத்தார்.

#### ஐவகை நிலங்கள்

இந்த ஐந்திணை ஒழுக்கங்களுள்ளே குறிஞ்சி என்பது புணர்தலும், புணர்தல் நிமித்தமும்; பாலை பிரிதலும் பிரிதல் நிமித்தமும்; முல்லை இருத்தலும் இருத்தல் நிமித்தமும்; மருதம் ஊடலும் ஊடல் நிமித்தமும்; நெய்தல் இரங்கலும் இரங்கல் நிமித்தமுமாகும். இந்த ஒழுக்கங்கள் எல்லாக் காதலர்களிடத்தும் நிகழ்வனவெனினும் இடத்துக்கேற்பவும் காலத்துக்கேற்பவும் மிகுந்து விளங்கும் இயல்புடையன. உதாரணமாக நெய்தல் நிலத்தையும் மாலைப்பொழுதையும் எடுத்துக்கொள்வோம். மீன் பிடிக்கக் கடல் மீது படகோட்டிச் சென்ற ஒருவன் பொழுதுபட்டும் திரும்பிவரவில்லை. நேரஞ் செல்லச் செல்ல அவனுடைய காதலிக்குத் தன் காதலனைக் காணவில்லையே என்ற எண்ணம் இரக்கத்தை உண்டாக்குமன்றோ! பறவைகள் கூடு நோக்கிச் செல்வதையும், நிலாக்கதிர் கடல் மேற்பரப்பதையும், அவள் காண்கிறாள்; கடல் ஒலிப்பதையும் கேட்கிறாள். இவை அக் காதலியின் இரக்கத்தை அளவின்றி மிகச் செய்கின்றன. இதனால் இரங்குதலுக்கு நெய்தல் நிலமும் மாலைப்பொழுதும் மிகப் பொருத்தமாய் அமைந்து உள்ளன என்பதை நாம் நன்கு அறியலாம்.

இவ்வாறே புணர்தலுக்குக் குறிஞ்சி நிலமும், ஊடலுக்கு மருத நிலமும், பிரிதலுக்குப் பாலை நிலமும் வாய்ப்புடையனவாய் இருப்பதை அறிந்த புலவர்கள் இந்தத் திணைகளின் பெயராலேயே நிலங்களையும் வழங்கினர். இதற்கு வேறு காரணங்கூறுவாருமுளர். நிற்க,

இயற்கையிலே திளைத்து, இயற்கையோடு ஒன்றி, இயல்பிலே இவ்வாழ்க்கையை நடத்திய தமிழ் மக்கள் தாம் வாழ்ந்த இடத்துக்கேற்பத் தம் வாழ்க்கையை நடத்தினர். தாம் வாழ்ந்த இடத்தை இயற்கையான ஒழுக்கத்திற்கேற்பச் சிறந்த பெயரிட்டும் வழங்கலாயினர். மலையையும் மலைசார்ந்த இடத்தையும் குறிஞ்சி என்றனர். வயலையும் வயல்சார்ந்த இடத்தையும் மருதம் என்றனர்; கடலையும் கடல் சார்ந்த இடத்தையும் நெய்தல் என்றனர்; காட்டையும் காட்டைச்சார்ந்த இடத்தையும் முல்லை என்றனர்; வனாந்தரத்தைப் பாலை என்றனர்.

இந்த ஐவகை நிலங்களைப்பற்றியும் இவற்றிலே வாழ்ந்த மக்களின் வாழ்க்கையினைப்பற்றியும் அவர்களுடைய எண்ணங்கள், உணர்ச்சிகள், குறிக்கோள்கள் முதலியவற்றைப் பற்றியும் மிகச்சிறப்பாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் உரைக்கின்றன.


ஐந்து திணையாக வகுக்கப்பட்ட காதல் ஒழுக்கத்தின் ஐந்து பிரிவுகளும் உரிப்பொருள் எனப்படும். அந்த ஒழுக்கம் நிகழும் இடமும் காலமும் முதற்பொருள் எனப்படும். பொழுது என்பது காலம். இது பெரும்பொழுது சிறுபொழுது என இருவகைப்படும். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனும் ஆறும் பெரும்பொழுதாகும். மாலை, யாமம், வைகறை, விடியல் நண்பகல் எற்பாடு என்பன சிறுபொழுதுகளாகும். ஒவ்வொரு நிலத்திற்கும் பெரும்பொழுதுகளும் சிறுபொழுதுகளும் தனித்தனி வகுக்கப்பட்டுள்ளன.

#### கருப் பொருள்

நிலமும் காலமும் பற்றித் தோன்றும் பலவகைப் பொருள்களெல்லாம் கருப்பொருள் எனப்படும். தெய்வம், விலங்கு, பறவை, மரம், மக்கள், தொழில், பறை, யாழ் முதலியன பிரதான கருப்பொருள்கள். குறிஞ்சி நிலத்திலே வாழ்ந்த மக்கள் முருகனை வழிபட்டனர். மலையில் விளையும் தினை மூங்கிலரிசி, ஐவன நெல் என்பவற்றை உணவாகக் கொண்டனர். தேன் எடுத்தல் கிழங்கு கிள்ளியெடுத்தல் முதலியன அவர்கள் தொழில். அருவியுஞ் சுனையுமே அவர்களுடைய நீர் நிலைகள். புலி, யானை, கரடி, பன்றி முதலியனவே அங்குள்ள மிருகங்கள், தேக்கு, வேங்கை, சந்தனம் அகில் முதலியன குறிஞ்சி நில மரங்களாகும். மயிலுங் கிளியும் அந்நிலத்துக்குரிய பறவைகள். குறிஞ்சிப் பூ வேங்கைப் பூ என்பன அங்குள்ள பூக்கள். தொண்டகப் பறையும் குறிஞ்சியாழும் அந்நிலத்துக்குரிய இசைக் கருவிகள். மலையில் உள்ள ஊர்கள் சிற்றூர், குறிஞ்சியெனவும் வழங்கப்படும். குறிஞ்சி நில மக்களை வேடர், குறவர், குறத்தியர் என வழங்குவர். இதுவரை குறிஞ்சிநிலக் கருப்பொருள்களைச் சுருக்கமாக எடுத்துக் கூறினேன். இவ்வாறே ஏனைய நான்கு நிலங்களுக்கும் கருப்பொருள்கள் உள. அவற்றினை இப்பொழுது எடுத்துக் கூறின் விரிந்து செல்லுமாதலின் அவற்றை விடுத்து அகத்திணைச் செய்யுள்கள் இரண்டொன்றைப் படித்துச் சுவைப்போம்.

இச்செய்யுள்களிலே ஐந்திணைக்கும் உரிய முதல், கரு, உரியெனும் முப்பொருள்களும் வருவதைக் காணலாம். இம் முப்பொருள்களுள்ளே உரிப்பொருளே மிகச் சிறந்தது. முதற்பொருளும் கருப்பொருளும் இந்த உரிப்பொருளைச் சிறப்படையச் செய்வதற்கு உபகாரப்படுவனவாகும். அவையெல்லாம் காட்சிப் பொருள்களாகும். ஆனால் புணர்தல், பிரிதல், இரங்கல், இருத்தல், ஊடல் எனும் உரிப்பொருள்களோ உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கருத்துப் பொ

[11-ம் பக்கம் பார்க்க]



42 அடி உயரமுள்ள தூக்கைபுரத்தின் சிகரத்தில் இருக்கும் அறையில் விமானப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து விமான நிலையத்தின் போக்குவரத்துகள் அனைத்தையும் நிர்வகிக்கமுடியும்

## காதலும் காமமும்

**"கவிதைப்பித்தன்"**

குமுத நாசியும் குவளைக் கண்களும்
இதயஞ் சொக்குமோர் பொருளாம்—காதல்
கூட்டு மென்பது மருளாம்

முகிழ்த்த இதழ்களும் முத்துப் பற்களும்
நெகிழ்த்தும் வலியவோர் பொருளாம்—காதல்
நிறுத்து மென்பது மருளாம்

சுருண்ட கேசமும் சிவந்த கன்னமு
முரண்டு செய்யுமோர் பொருளாம்—காதல்
மூட்டு மென்பது மருளாம்

மூங்கிற் தோள்களும் மொக்கு மார்களும்
ஏங்கச் செய்யுமோர் பொருளாம்—காதல்
எழுப்பு மென்பது மருளாம்

வாழைத் தொடை இணை வளையு மென் இடை
கோழை யாக்குமோர் பொருளாம்—காதல்
கூட்டு மென்பது மருளாம்

[illegible]கும் ஆவலில்
[illegible]ப்பார்!—அதன்
அமரத் தன்மையைக் குலைப்பார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநோத மனிதன்

"மனோகரன் சொஸ்த மடைந்து ஆஸ்பத்திரியிலிருந்து "டிஸ்சார்ஜ்" செய்யப்பட்டு விட்டான் என்ற செய்தியறிந்ததும் கண்டியிலுள்ள தொழிலாளர் சங்கங்களும் தொழிலாளர் தலைவர்களும் அவனைக் கண்டிக்கு விஜயம் செய்யுமாறு சேட்டு கடிதங்களும் தந்திகளுமாக அனுப்பினர்கள். அவர்களின் வேண்டுகோளை ஏற்று மனோகரன் கண்டிக்குச் சென்று பல கூட்டங்களில் பேசினர். அக்கப்பக்கத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலைபார்க்கும் இந்தியத் தொழிலாளிகள் திரண்டு சென்று மனோகரனின் பேச்சை கேட்டு ரஸித்து மகிழ்ந்தார்கள். இந்தியத் தொழிலாளிகள் முன்னிலையில் பேசுவது மனோகரனுக்கு ஒரு தனி இன்பமாக இருந்தது. அவனுடைய பேச்சுகள் சொல்நயம் பொருள்நயம் மலிந்தனவாகவும் உணர்ச்சி யூட்டுவனவாகவும் இருந்தன சென்றவிட மெல்லாம் அவனுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொழிலாளர் தலைவர்களெனப் படுவோர் அவனுடைய அறிவையும் ஆற்றலையும் பேச்சுவன்மையையும் கண்டு வியந்தனர்.

* *

இலைதிங்ஙன[illegible] மல் விலைசத்தோட்டத்தில் ச[illegible] வீராவின் இடத்தில் கிளார்க்காக வேலைக்கமர்ந்த சிவபாலன் வயதில் சிறியவனாகவும் உலக அனுபவம் குறைந்தவனாகவும் இருந்தபோதிலும் இயற்கையாக வேசாயர்த்தியசாலி அவன் டக்ளஸ் துரையின் குணத்தையறிந்து சர்வ ஜாக்கிரதையாக தனது வேலைகளைச் செய்துவந்ததுமலாம[illegible] துரையின் அன்பையும் [illegible]பாதித்துக்கொண்டான். துரையின் நன்மதிப்பைப் பெறவேண்டும். அவருக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தால் அவன் தவறான காரியம் எதையும் செய்யத் துணியவில்லை. சமரவீராவைப் போல் துரையின் கைப்பொம்மையாக இராமல் தனது கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்துகொண்டு டக்ளஸுக்கும் தன்மீது பிரியமும் அபிமானமும் ஏற்படும்படியாக நடந்துவந்தான்.


டக்ளஸ் துரைக்கும் சிவபாலனைப் பிடித்திருந்தது அவனுடைய வேலை ரொம்பவும் திருப்திகரமாக விருந்தது. துரையிடம் மிகவும் பணிவாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டான் சிவபாலன் துரையிடம் எப்பவுமே "சார்" போட்டே பேசினன். துரையுடைய பேச்சுக்கு மறுபேச்சே பேசுவதில்லை இத்தகைய நற்குணங்கள் படைத்த சிவபாலன்மீது டக்ளஸ் துரைக்கு அபிமானம் உண்டானதில் வியப்பென்ன? .

சிலபல சமயங்களில் டக்ளஸ் சிவபாலனையே தனது அந்தரங்க காரியதரிசியாகவும் பாவித்துக்கொண்டார். பிரேமாவதிக்கு ஏதாவது செய்தி சொல்லியனுப்புவதாயிருந்தால் அல்லது பிரேமாவதிக்கு தோட்டத்திலிருந்து காய்கறியோ தேயிலையோ அல்லது பணமோ அனுப்புவதாயிருந்தால் சிவபாலனையே பயன்படுத்தி வந்தார் இப்படியாக பிரேமாவதிக்கும் டக்ளஸ் துரைக்குமிடையே தூது போய் வந்துகொண்டிருந்த சிவபாலன் நாளாவட்டத்தில்பிரேமாவதியின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமானான். சிவபாலன் வீட்டுக்கு வந்தால் அவனை உடனே திரும்பிப் போகவிடமாட்டாள் பிரேமாவதி. சாப்பாட்டு நேரமாயிருந்தால் சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டும் என்று கட்டாயப்படுத்துவாள் சாயங்கால வேளையாயிருந்தால் டீ, 'பிஸ்கட்" கொடுத்து சேமலாபங்களை விசாரித்தறிந்துகொண்டுதான் விடை கொடுப்பாள் பிரேமா

சிலபாலனுக்கு ஆரம்பத்தில் பிரேமாவதி வீட்டுக்குப் போவதே பிடிக்கவில்லை துரை சொல்லும்போது செய்யாமல் விட்டால் நல்லாயிராதே என்றெண்ணியே பிரேமாவதி வீட்டுக்குச் செல்லச் சம்மதித்தான். பிரேமாவதியோடு நெருங்கிப் பழகப் பழக அவள் தன் யௌவனத்தை விரும்புகிருள். தன்னைக் காமுறுகிருள் என்பதை வயதுவந்த வாலிபனுகிய அவன் சந்தேகமறத் தெரிந்து கொண்டான். ஆனல் அவன் பிரேமாவதியின் உள்ளக்கிடக்கையை தெரிந்து கொள்ளாதவன் போல் கல்மிஷமின்றி நடந்துகொண்டான். பிரேமாவதிமூலமாக சமரவீராவின் திடீர் மரணத்துக்கான நிஜக் காரணத்தை தெரிந்துகொள்ளலாம் "சுந்தரம் அண்ணச்சி" மீது சுமத்தப்பட்ட வீண்பழியை துடைத்துவடலாம் என்ற எண்ணங்களினலேயே அவன் பிரேமாவதியின் சகவாசத்தை விரும்பினன்.

ஆனல் அவன் நினைத்ததுபோல் பிரேமாவதிக்கு சமரவீராவின் மரணத்துக்கான உண்மைக் காரணம் தெரிந்திருக்கவில்லை பேச்சுவாக்கில் அவளுடைய வாயைக் கிளறிப் பார்த்தபொழுது சமரவீராவின் மரணம் எப்படி நேர்ந்ததென்று தெரியாமல் அவள் இருட்டில் இருப்பதை சிவபாலன் கண்டான். ஆகவே அவன் சமயம் வாய்க்கும் போதெல்லாம் துரைமீது பிரேமாவதிக்குச் சந்தேகம் உண்டாகக்கூடிய கதைகளைச் சொல்லிக்கொண்டு வந்தான். ஒரு நாளைக்கு சுந்தரத்தின் உயர்ந்த குணங்களைப் பற்றியும் அவன் சமரவீராவைக் கொலைவேண்டிய காரணமே இல்லை என்றும் சொல்வான். மற்றொரு நாளைக்கு சமரவீரா துரையின் கைக்காக தோட்டக் கணக்குப் புத்தக

(12ம் பக்கம் பார்க்க)





# கீழ் குறிப்பிட்டுள்ள பிரசித்தபெற்ற

## ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

"HIS MASTER'S VOICE"

The Hallmark of Quality

இசைத்தட்டுகள் விரைவில்வந்துசேர்ந்துவிடுமென [illegible] எதிர்பார்க்கப்படுகிறது.

உங்களுக்குத் தேவையானவற்றை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மாடர்ன் தியேட்டர்ஸ்
**"கல்யாணி"**
பாட்டுகள்
(சங்கீதம்: எஸ் தக்ஷிணமூர்த்தி)

N. 65079 — கே ராணி பார்டி: டக்கு டக்கு; கே: ராணி: என் வாழ்வினில்
N. 65080 — டி. எம் சௌந்தரராஜன்: செல்வம் நிறைந்தவர்; டி எம் சௌந்தரராஜன் & கே. ராணி: இனி பிரிவில்லாமல்
N. 65081 — எஸ் தக்ஷிணமூர்த்தி: காதல்; டி எம் சௌந்தரராஜன்: வாழ்வார்களே

பெலிகன் பிக்சர்ஸ்
**"புயல்"**
பாட்டுகள்
(சங்கீதம் & பாட்டுகள்: எஸ். ஜி. கே. பிள்ளை)
பி ஜி கிருஷ்ணவேணி (ஜிக்கி) & எச். மெஹ்பூப்

N 65083 — பிம்ரலை மயிலை மல; ஜகமதிலே ஒரு
N. 65084 — பி. ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி): கட்டி கரும்பே; வாடுதே என் மனம்
N. 65085 — பி ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி): வீணுகுமோ வாழ்நாள்; குலஜா பீகப்; தலை மனமே

நீலா புரொடெக்ஷன்ஸ்
**"ஆத்ம சகி" ('பிரிய சகி')**
பாட்டுகள்
(சங்கீதம்: பிரதர் லக்ஷ்மணன்)
(பாட்டுகள்: கம்பதாஸன்

N. 65086 — பி. ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி): எந்தன் கண்ணே; டி ஏ மோதி & பி. லீலா: குண்டு குண்டு மல்லிகை
N. 65087 — கண்டசாலா: காலம் மாறிடாதோ; என். எல். கானசரஸ்வதி: வெற்றி வெற்றி

ஸ்ரீ வள்ளி புரொடெக்ஷன்ஸ்
**"வேலைக்காரன்"**
பாட்டுகள்

N. 65088 — சிதம்பரம் எஸ, ஜெயராமன்: பாடுபடுவோர்க்கே; மனிதா நீ செய்த

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி
**"ரத்ன குமார்"**
பாட்டுகள்
பி. பானுமதி & காலஞ்சென்ற பி. யு. சின்னப்பா

N 65089 — ஆனந்த வெள்ளம்; அந்தி நேரம்

ஜெமினி ஸ்டுடியோஸ்
**"மூன்று பிள்ளைகள்"**
பாட்டுகள்

N 65090 — பி. ஜி கிருஷ்ணவேணி (ஜிக்கி): என் ஆனந்தமென்ன சொல்வேன்; ஏ எம் ராஜா: சாலபென்ப அனுகூலமாகில்
(ராதா) ஜெயலக்ஷ்மி, பி லீலா & என் எல். கானசரஸ்வதி
N 65091 — மாலை தரித்த மகராசி; ஏ எம். ராஜா: வாழ்வதும் தாழ்வதும்
N 65092 — என். எல். கானசரஸ்வதி: உன்னருள் மறவேனய்யா (2 பாகங்கள்)

சோல் ஏஜண்டுகள்:

# கார்கில்ஸ் [சிலோன்] லிமிட்டெட், கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப்பாருங்கள்

குயுக்தி

★ டி கே முகமது
காத்தான்குடி.

கே: சிக்கனம் என்றால் என்ன?

ப: ஒருவர் மாறி ஒருவராக தங்கள் சகாக்களையும் அழைத்துக்கொண்டு யு. என். பி மந்திரிகள் விமானத்தில் உலகைச் சுற்றி உல்லாசப் பிரயாணம் நடத்துவதற்குப் பெயர்தான் சிக்கனம்.

ஃ

என். சுப்ரமண்யம்,
தொரனியகல.

கே: ஆண்கள் எப்பொழுது நாணம் அடைகிறார்கள்?

ப: முகச் சவரம் செய்துகொண்டு தங்கள் மீசை இழந்த முகத்தை நிலைக் கண்ணாடியில் பார்க்கும்போது.

ஃ

ஆர். வி பி. ஜோசப்,
கொழும்பு.

கே: உமது மனைவி குடிவகை ஏதேனும் அருந்துவாளா?

ப: ஆஹா நன்றாக அருந்துவாள். பால் முதல் முஞ் சோற்றுத் தண்ணீர்வரை ஒன்றும் பாக்கி வைக்க மாட்டாள்: ஆனால் மதுவகைமட்டும் அருந்தமாட்டாள்

ஃ

கே; சிவகுரு,
திர்கோணமலை

கே: அரசியலில் திரு ஜீ ஜீ பொன்னம்பலம் ஆடிவரும் நாடகத்தை எப்படியழைக்கலாம்?

ப: கலிகாலக் கோவலன் நாடகம் என்று அழைக்கலாம். திரு ஜீ. ஜீ தான் கலிகாலக் கோவலன, தமிழ் பேசும் மக்கள் கண்ணகி, யு. என். பிதான் மாதவி. கழுத்தில் விழுந்தமாலை சழற்ற முடியாமல் திண்டாடுகிறார் அந்த மாலைதான் கைத்தொழில் மந்திரிப் பதவி.

ஃ

தாவூது, ஏறாவூர்.

கே: சிங்களமே இலங்கையின் அரசாங்க மொழியாக வேண்டும் என்று சொல்லும் தமிழர்களைப் பற்றி தங்கள் அபிப்பிராயமென்ன?

ப: அசல் விபீஷணர்கள் என்பதுதான்

ஃ

எம் ஏ. சமது, மூதூர்.

கே: பெண் ஒரு சட்டப் புத்தகம் என்கிறேன்?

ப: இல்லை. பெண் சட்டப் புத்தகத்தைக் கூடத் துளைத்து விடும் ராமபாணப் பூச்சி

கே: காதலுக்கும் கலியாணத்திற்கும் உறவு முறையென்ன?

ப: மாமியும் மருமகளும் அதாவது கலியாணம் வந்ததும் காதல் வெளியேறி விடும்.

ஃ

எஸ். பேச்சிமுத்து,
புத்தளம்

கே: வாடாத பூ எது?

ப: மத்தாப் பூ.

ஃ

எம் ஏ. ஜப்பார்,
எருக்கலம்பிட்டி.

கே: குயுக்தியாரே தங்களுக்கு அதிகம் விருப்பமானது எது? வெறுப்பானது எது?

ப: விருப்பமானது நேயர்களின் ஹாஸ்ய ரஸமான கேள்விகளுக்குப் பதிலளித்தல். வெறுப்பானது யு. என். பி அரசாங்கம்.

ஃ

கே. எஸ். நமநாதன்,
அறங்காவ.

கே: உழைப்பது கஷ்டமா? அதைச் செலவழிப்பது கஷ்டமா?

ப: உழைப்பதை விட உழைத்ததைச் சரியான வழியில் செலவழிப்பது தான் பெருங்கஷ்டம்.

ஃ

டி. எம் ஐ அம்ஸா,
அப்பாங்கோட்டை.

கே: எது கூர்மையானது: கத்தி வீச்சா கண் வீச்சா?

ப: இரண்டையும்விட புத்தி வீச்சுத்தான் கூர்மையானது.

ஃ

ச. பாலசிங்கம்,
புங்கங்குளம்.

கே: டாக்டர் நாகநாதனையும் ஜீ ஜீ பொன்னம்பலத்தையும் யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஒரு குஸ்தி போட்டி நடத்தும்படி கேட்டால் இருவரும் சம்மதிப்பார்களா?

ப: குத்துக் கரணப் போட்டியென்றால் திரு பொன்னம்பலம் சம்மதிப்பார். இதுவரை பல குத்துக் கரணங்கள் அடித்து அவருக்கு பழக்கம் இருக்கிறது.

ஃ

என் சி அமரசிங்கம்,
வீரகொட

கே: குயுக்தியாரே, உமது குயுக்தினியின் பெயரையும் நட்சத்திரத்தையும் அறிய விரும்புகிறேன்.

ப: பெயர்: ஸ்ரீமதி குயுக்தி நட்சத்திரம். துருவ நட்சத்திரம்.

ஃ

ஏ ஏ. பாவா, கல்முனை.

கே: தன் மனை[illegible] அழகாயிருந்தும் பிற ம[illegible]கையரை ஏன் சில ஆ[illegible] நாடுகின்றனர்?

ப: சொந்த மனைவியிடம் அழகிருக்கலாம். ஆனால் அநுராகமில்லாவிட்டால்...... அன்பிருக்கலாம் ஆனால் சாகஸம் இல்லாவிட்டால்......குயில் கறுப்பாயிருந்தாலும் குரல் இனிமையாயிருப்பதால் அல்லவா அதை எல்லோரும் விரும்புகின்றனர்

ஃ

க. சத்தியானந்த சிவன்,
ஈச்சமோட்டை

கே: என்னை இரு பெண்கள் விரும்புகின்றனர். ஒரு பெண் வாழ்வில் ஐம்பதுக்கு ஐம்பது உரிமை தர வேண்டுமாம். மற்றவள் தன்மான வாழ்வு தந்தால் போதுமாம். இவர்களில் எவளை மணந்தால் என் வாழ்வு உருப்படும்?

ப: இதில் எந்தப் பெண்ணை மணந்தாலும் உம்முடைய வாழ்வு உருப்படாது பேரம் பேசும் பெண் வாழ்க்கையில் சோபிக்கமுடியாது சிவனே என்று விட்டுத் தள்ளிவிட்டு மூன்றாவது பெண் ஒன்றைப் பாரும்.

ஃ

நா பரமசாமி
யாழ்ப்பாணம்

கே: "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்னும் வள்ளுவர் கூற்றுக்கிசைய இக்காலத்துப் பெண்மணிகள் நடக்கின்றார்களா?

ப: இல்லை; பெண்மணிகளின் முன்னால் ஆண்மணிகள் வள்ளுவர் வாக்கைப் பின்பற்றி "அமர் அருள்" பெறுகின்றார்கள்

கே: 'கற்பு' என்ற பதத்தின் பொருளென்ன?

ப: சொன்ன சொல்லைக் காப்பாற்றும் பண்புக்கு பண்டைத் தமிழர்கள் 'கற்பு' என்று பெயரிட்டு அழைத்து வந்[illegible]ள். இது ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவாகவே இருந்து வந்தது. ஒரு ஆண் ஒரு பெண்ணைப் பார்த்து "உன்னையன்றிப் பிறிதொருத்தியை நாடேன்" என்று சொல்வதையும் பெண் ஆடவனைப் பார்த்து "பிறிதொருவரை நாடேன்" என்று சொல்வதையும், பின்பு அவ்விருவரும் தாங்கள் சொன்ன சொல்லை உயிர் போகும் வரை காப்பாற்றுவதையுமே 'கற்பு' என்றார்கள். இதனால்தான் ஔவையார் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று அந்தக்காலத்தில் பாடினார். இடைக்காலத்தில் கற்பை பாவம், ஏழைப் பெண்களின் தலையில் கட்டிவிட்டு ஆடவர்கள் தங்கள் விருப்பப்படி ஆடத் தலைப்பட்டார்கள். இதைக் கண்ட பாரதியார் கற்பின் உண்மைப் பொருளைக் கண்டுபிடித்து "கற்பென்பதை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம்" என்றார்

★ இவ்வாரம ரூபா 3-00 பரிசு பெற்றவர்.

## பரிசு ரூ. 3-00

யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக்கூடிய சிறந்தகேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

## மேயர் ஊர்வலம்

லண்டன் மேயர் தங்கரதத்தில் ஊர்வலம் வருகிறார் வருடந்தோறும் நவம்பர் மாதத்தில் இந்த ஊர்வலம் நடைபெறுகிறது.




# சீனடி தைலம்



A. OMER LEBBE Esqr,
General practitioner of
Indigenous Medicine
Manufacturer of CHEENADY
ENNEI.

சீனடி தைலம் தயாரிக்கும் ஆதிபிதா கனம் A உமர் லெவ்வை சுதேசவைத்திய நிபுணர்.

தங்களது நோயை தீர்க்கும் ஒரே யூனானி முறைபாதம் அண்ட வாய்வு, ஹெர்ணியா பாரிச வாய்வு, முடக்கம், உடைவு, உளுக்கு, பலஹீனம், ஆண்குறி பலனில்லாமை போன்ற சகல நோய்களுக்கும் மிகச் சிறந்தது. நேரில் அல்ல தலெட்டர் மூலமாய் கேட்கவும்.

பாவிக்கும் முறை மருந்துடன்.

அ. உமர் லெவ்வை (சுதேச வைத்தியர்)

ஹாரீமளுவை, நம்புக்கனை.

| | |
|---|---|
| பெரிய போத்தல் | ரூ. 5-50 |
| சிறிய போத்தல் | ரூ 3-50 |

கடிதங்கள் யாவும்:
RAHMANIA MEDICAL STORES
& DISPENSARY
327 DEMATAGODA. COLOMBO.
Phone: 9.855.



# கண் பார்வை

தெளிவடைய

## ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்



உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இத்தைலத்தின் உபயோகத்தால் கண்சிகப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் அரிப்பு, கண் பார்வை குறைவு, கண் கூச்சம், கண்ணில் பீளை சாடுதல், கண்வலி கண்குத்து, வெள்ளெழுத்து, ஒருதலைவலி, கைகால் தேக எரிச்சல், மண்டையிடி, மூலச்சூடு, அஸ்திகாங்கை, கெர்ப்பச்சூட்டால் உண்டாகும் திரேக காங்கல், காதுநோய், காது செவிடு, காது இரைச்சல், காதில் சீழ்வடிதல், பீனிசம், தடுமல், மூக்கிலிருந்து நீர்வடிதல், மயக்கம், தலைமயிர் உதிர்தல், செம்பட்டை மயிர், பித்தநரை முதலியவைகளை ஆச்சரியமாய் குணம்செய்யும். கூந்தல் நன்றாய் வளரும். இத்தைலத்தை உபயோகித்த எவரும் குணமில்லை எனறு சொல்ல முடியாது ஆகையால் நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். உண்மை விளங்கும்.

புட்டிக்கு ரூ. 3/- தபால் செலவு சதம் 85.

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை டட்லி நெருப்புடன் விளையாடுகிருர்

## இன்று இந்தியத் தமிழருக்கு—நாளை இலங்கைத் தமிழருக்கு!

### விபரீதப் போக்கின் விளைவு பயங்கரமானதாயிருக்கும்

இ. இந்தியர்களை அரசியல் அனுதைகளாக்குவதற்காக சுப்ரீம் கோர்ட், பிரிவிக் கவுன்ஸில் ஆகிய உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளையே குழிதோண்டிப் புதைக்கும் அளவுக்கு இலங்கை அரசாங்கத்தின் இந்தியர்-எதிர்ப்பு உணர்ச்சி வளர்ந்துவிட்டது இது பாரதூரமான, துரதிஷ்டமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

"இன்று இ. இந்தியத் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதற்காகச் சட்டம் இயற்றப்படுகிறது. நாளை, கீழ் மாகாணத்திலும் வட மாகாணத்திலும் வாழுகின்ற இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பிடுங்குவதற்காகச் சட்டம் இயற்றப்படலாம்' என்று கோட்டே பிரதிநிதி சென்ற வாரம் பாராளுமன்றத்தில் கூறியதை நாம சிறிது கவனிக்க வேண்டும்.


பிரஜாவுரிமைத் திருத்தச் சட்டத்தை அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் மூன்றுதடவை வாசித்து நிறைவேற்றிக்கொண்டனர் ஆளும் வர்க்கத்தினர். பிரஜாவுரிமை பெறும் இந்தியர்களின் எண்ணிக்கையை குறைக்கும் முறைகளில் இதுவும் ஒன்று. இன்னும் பல திட்டங்கள் படிப்படியாக அமுலுக்கு வரக்கூடும். அதற்காக வேண்டி அவசியமானல் அரசியற் சட்டம் கூட மாற்றப்படலாம். இதுதான் இன்றைய யு. என். பி. தர்பாரின் கொள்கை.

இலங்கை சர்க்காரின் நடவடிக்கையின் விளைவாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே மனக்கசப்பும் பகைமையும் அதிகரித்து வருகிறது.

இது நேருவை ஏமாற்றுவதற்காகவா அல்லது இந்தியர்களை ஏமாற்றுவதற்காகவா என்பது தெரியவில்லை. இப்பிரச்னையைப் பற்றி நேருவைச் சந்தித்துப் பேசவேண்டுமென்ற ஆவல் இருப்பது உண்மையானல், அவரைச் சந்திக்க முன்பு அவசரக் கோலமாக சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியமென்ன? சட்டத்தை நிறைவேற்றிய பிறகு நேருஜியைச் சந்திக்க வேண்டியதன் அர்த்தமென்ன? எல்லாம் வெறும் வாணவேடிக்கை.

இந்நாட்டின் தேசிய செல்வத்தை (தேயிலை, ரப்பர்) உற்பத்திசெய்த ஏழை இந்தியர்களின் உரிமைகளைப் பறித்து தாயகமற்ற அரசியல் அனுதைகளாக்குவதால், உலக அரங்கில் இலங்கையின் அந்தஸ்து யூதர்களை நாடுகடத்திய ஹிட்லர், மலான் ஆகியோரின் அந்தஸ்தைப் போன்றதாகிவிடுமென்பதை தூரதிருஷ்டியும், சர்வதேசிய ராஜீய ஞானமுமற்ற குறுகிய தேசிய வாசத்தில் ஊறிப்போன யு. என். பி. ஆட்சியாளர் உணரவில்லை போலும்.

தேயிலை, ரப்பர் தோட்டங்கள் அழிந்து போனாலும் பரவாயில்லை. இந்தியர்களை நாடுகடத்திவிடவேண்டும் என்று பண்டாரவளை பிரதிநிதி பாராளுமன்றத்தில் வற்புறுத்தினர். ஆம்—சாறைப் பிழிந்தாகிவிட்டது இனி சக்கையை எறிந்துவிட வேண்டியதுதானே! பெரும்பான்மையைக் கொண்டு சுலபமாக தற்கொலைச் சட்டங்களை இயற்றிவிடலாம். அதனால் உள்நாட்டிலும், சர்வதேசீய அரங்கிலும் இறுதியாக ஏற்படக்கூடிய பயங்கரமான விளைவுகள் யாவை, அண்டை நாடான இந்தியாவின் பகைமையைத் தேடிக் கொண்டதினால் என்னென்ன பலாபலன்கள் ஏற்படக் கூடும் என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்தவர்களுக்கு ஆட்சியாளர் சிறுபிள்ளைத்தனமாக நெருப்புடன் விளையாடுகிறார்களென்பது புலனாகும்.



இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் கடற்படை அதிகாரி சேர் ரொட்ரிச் (வலது கோடியில் நிற்பவர்) கொழும்புத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தைப் பார்வையிட்டார். அவர் பக்கத்தில் கொழும்பு போர்ட் கொமிஷன் தலைவர் திரு ஹென்ரு நிற்பதைக் காண்க.


## அமிர்தா வாய்வு சூரணம்

இது சகலவிதமான வாய்வு தொந்தரவு வயிற்றுவலி, பளிச்சலட்டம், வாந்தி அஜீரணம், இடுப்புவலி, முதுகுவலி, பசியின்மை, சூதகவயிற்றுவலி, இருமல் இளைப்பு, ஆஸ்த்மா முதலிய வியாதிகளுக்குநிச்சயநிவாரணி. கர்ப்பஸ்திரீகளுக்கோர் நல்ல மருந்து.

டின் விலை ரூ 2-00. தபால் செலவு வேறு.

## நேத்திரா அமிர்த தைலம்

இதை நாள்தோறும் பாவித்துவந்தால் பீனிஸம் ஒருதலைவலி, பித்தக் கிறுகிறுப்பு. தூக்கமின்மை, பாலைக்கண், கண்கூச்சல், கண்ணெரிச்சல், நீர் வடிதல் முதலிய வியாதிகள் சுகமாகும். அளவுக்கு மிஞ்சிய உஷ்ணத்தைத் தணிக்கும் கண்களுக்குப் பிரகாசத்தையும். கூந்தலை அழகாகவும், கறுப்பாகவும் வளரச் செய்யும்

12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 4-50.
6 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 2-50.
தபால் செலவு வேறு.

T. K. (டி. கே. "மார்க்" இருக்கிறதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்.

### செல்லராஜா அண் கோ.

பாக்கியலெக்ஷிமி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு, கொழும்பு

ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாசம
பீடியிற் சிறந்தது கமலா பீடியே

★

கமலா, லீலா பீடிகளும் படிக்குத் தேவையான நாகப்பூர், சிங்கறணி இலைகளும், ஆக்கூழ் நிற்பாண் புகையிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. அவசியம் கவனிக்கப்படும்.

### கமலா ஸ்டோர்ஸ்

Proprietor: S. V. பொன்னம்பலம்
15, செட்டியார் தெரு கொழும்பு.
போன் 3587 தந்தி: தாமரை


## இ. இந்தியர் இரு கூறுகப் பிரிக்கப்படுவர்

### பிரஜைகளல்லாதவர்கள் நாடு கடத்தப்படலாம்

### சாறை உறிஞ்சியபின் சக்கையை எறியும் அரசாங்கக் கொள்கை

"இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால், இலங்கைப் பிரஜைகளல்லாத இந்தியர்களை நாடுகடத்த இலங்கை சர்க்கார் தயாராயிருக்கிறது" என்று திரு டட்லி சேனநாயகா சென்ற வாரம் கூறினர். இவ்வாறு கூறினவர் சாதாரண மனிதரல்ல. நாட்டின் பிரதம மந்திரி. ஒரு பிரசாரப் பொதுக் கூட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டுக் கொட்டிய வார்த்தைகளல்ல அவைகள்—பாராளுமன்றத்தில் முன்னுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும்போது பொறுப்புடன் கூறப்பட்ட வார்த்தைகளாகும். ஆகவே பிரதம மந்திரி ஏதோ ஆத்திரத்தில் அவசரப்பட்டு அவ்வாறு கூறிவிட்டாரென்று எண்ணுவதற்கு இடமில்லை.

டட்லியே மக்கள் முன்னல் பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கிருர். நாடுகடத்தும் படலம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. கள்ளத்தோணி, வாசபர்மிட், அரிசிக் கூப்பன், பணம் அனுப்புதல் முதலிய துறைகளில் பல்வேறு கீர்ப்பந்தங்களும் சங்கடங்களும் இந்தியர்கள் மீது தினசரி சுமத்தப்படுகின்றன. அவர்கள் இக்கஷ்டங்களைச் சகிக்க முடியாமல் வெளியேறத் தொடங்கிவிட்டார்கள் கடந்த இரு வாரங்களில் இந்திய ஹைகமிஷனர் மூலமாக மட்டும் இந்தியாவுக்குச் சென்றவர்கள் தொகை 700க்கு மேல் என்று தெரிகிறது. அவர்களிலபலர் பல வருடங்கள் இலங்கையில் வசித்து பிரஜைகளாக இருக்க வேண்டும். வேறு எந்த நாட்டின் பிரஜைகளாகவும் அவர்கள் இருக்க முடியாது.

கூறியிருக்கிருர். இன்னும் இரு வருடங்களுக்குப் பிறகும்—அதாவது இலங்கை இந்தியர்கள் பிரஜைகள், பிரஜைகளல்லாதவர்கள் என்று இரு கூறுகப் பிரிக்கப்பட்ட பிறகும்—நேருஜி இதே கொள்கையை வற்புறுத்துவாரானல் நிலைமை தர்ம சங்கடமாகிவிடும்.

#### புதியவழி

அந்த நிலைமை ஏற்படுமாயின், இ. இந்தியர்கள் இலங்கைப் பிரஜைகளுமல்ல—இந்தியப் பிரஜைகளுமல்ல என்ற அவல நிலைக்கு ஆளாகி திரிசங்கு சுவர்க்கத்தில் தவிக்கவேண்டி வரும். இந்த நிலைமை தான் அன்று ஹிட்லரால் நாடு கடத்தப்பட்ட யூத இனத்தினருக்கு ஏற்பட்டது ஆனல் அவர்கள் கால்மார்க்ஸின் சித்தாந்தங்களுக்கேற்ப உலகப் பிரஜைகளாகிவிடவேண்டுமென்று கருதாமல், சில சாம்ராஜ்யங்களின் ஆதரவுடன் பாலஸ்தீனத்தில் பலாத்காரமாகத் தங்களுக்கென ஒரு யூதராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டு குடியேறிவிட்டார்கள் இலங்கை இந்தியர்களுக்கு அந்த நிலை ஏற்படுமாயின் ஆச்சரியப்படுவதற்கில்லை

#### நிர்ப்பந்தங்கள்

இந்தியர்களைப் பற்றிய அரசாங்கக் கொள்கையைப் பிரதமா தெளிவுபடுத்தியிருக்கிருர் இதுமட்டுமல்ல—தேர்தல் சமயத்தில் இந்தியர்களைப்பற்றி யு. என். பியின் கொள்கையை அதன் தலைவர் திரு

கடந்தவாரம் பண்டித நேரு டில்லி மக்கள் சபையில் பேசும்போது இலங்கை இந்தியர்களுக்கு இலங்கைச் சர்க்கார் பிரஜாவுரிமை அளிக்கப் படாவிட்டால் அவர்கள் அரசியல் அனுதைகளாகிவிடுவார்கள் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவணக்கத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும்

## கஃபா புனிதஸ்தலத்தின் வரலாறு

(எச். முசாகு மீரான்)

உலகம் தோன்றிய காலமுதல் தெய்வத்தன்மை பொருந்திய வணக்க ஸ்தலம் மக்கமா நகரின் நாப்பண் அமைந்துள்ள கஃபாவாகும். அளவிட்டுக் கூறமுடியாத அவ்வளவு மேன்மையும், பரிசுத்த தன்மையும் பொருந்திய இஃது இஸ்லாமிய உலகிற்கே நடுநாயகமான வணக்க ஸ்தலமாக மிளிர்ந்துவருகிறது நபி இப்ருஹிம் (அலை) அவர்களின் காலத்திற்கும் முந்தியதாகும் நபி இப்ருஹிம் (அலை) அவர்களும், அவர்களது அருமைப் புதல்வர் இஸ்மாயீல் (அலை) அவர்களும் இப் பரிசுத்த வணக்க ஸ்தலத்திலிருந்த விக்ரஹங்களை நீக்கி, மறுபடியும் அஸ்திபாரமிட்டுக் கட்டிடம் கட்டி உலகிலே முதன் முதல் இறை வணக்கத்திற்கேற்ற ஸ்தலமாக மாற்றினார்கள். இஸ்லாம் பூரணமாய்த் தோற்றுவிக்கும் காலத்திற்கு முன்புகூட, இது பரிசுத்த ஸ்தலமாகவும் அகதிகளின் அடைக்கலப்புகும் இடமாகவும் கருதப்பட்டு வந்துள்ளது.

எம்பிரான் முஹம்மது முஸ்தபா இரசூல் (ஸல்) அவர்கள் மதீனாவில்வாழுங் காலத்தில் (பைதுல்முகத்தஸ) ஜெருசலத்தை நோக்கித் திருப்பி நின்று முஸ்லிம்கள் இறைவனை வணங்கி வந்தார்கள். அக்காலத்தில் ஜெருஸலத்தை யூதர்களும் கிறிஸ்தவர்களும் தங்களின் புண்ணிய பூமியெனக் கருதிக் கொண்டாடிவந்தனர்.

நிற்க, ஜெருஸலத்தை நோக்கி நின்று முஸ்லிம்கள் இறை வணக்கம்புரிந்த காலத்து, திரு மக்கமா நகர் அவர்களின் பின்புறத்தே அமைந்திருந்தது. இதைக் குறித்து எம்பிரானவர்களுக்கும் ஏனைய முஸ்லிம்களுக்கும் மனக் கலக்கமும் அதிருப்தியும் உண்டாயின. உடனே இறைவன் எம்பிரானவர்களையும் அன்னவர்களின் உம்மத்துமார்களையும், பரிசுத்த கஃபாவை நோக்கி நின்று தன்னை வணக்கும்படி ஒரு தெய்வீக வெளிப்பாட்டின்மூலம் அறிவித்தான். அன்றுமுதல் கஃபாவென்னும் புண்ணிய ஸ்தலம் முஸ்லிம்களின் மிக முக்கியமான வணக்க ஸ்தலமாகக் கொண்டாடப்பட்டு இன்றளவும் இருந்து வருகிறது. இறைவனை வணங்கும் காலத்து முஸ்லிம்கள் ஏன் கஃபாவை நோக்கி நிற்றல் வேண்டும்? அங்குதான் கடவுள் பள்ளிகொண்டுள்ளாரா? இதுவும் விக்ரஹ வணக்கத்துடன் சேர்ந்ததல்லையா? என்றெல்லாம் முஸ்லிமல்லாதார்கள் நம்மைக் கேட்கலாம். உண்மையிலே ஆண்டவனுக்கு இந்த இடம் அந்த இடம் அல்லது இந்தத் திசை அந்தத் திசை என்ற பாகுபாடு இல்லை. ஏனெனில் அல்லாஹ் எங்கும் நிறைந்தவன் எல்லாவற்றையும் படைத்த இரக்ஷிப்பவன் எப்பக்கம் திரும்பினாலும் அப்பக்கம் அல்லாஹ்வின் அச்சமே அமைந்து கிடக்கின்றது அவனுக்கு இது பிரியமுள்ளது, அது பிரியமில்லாதது என்பதே கிடையாது

மனித வாழ்க்கையில் எதற்கும் ஒரு குறிக்கோள் வேண்டும்; ஒற்றுமை வேண்டும்; ஒழுங்கு வேண்டும்; நேர்மை வேண்டும். தான்தோன்றித்தனமாக மனிதன் எக்காரியத்திலும் தன் இச்சைப்படி நடந்து கொள்ள இயற்கை இடங்கொடாது. இயற்கையின் அற்புதங்கள் ஒரு நியதிப்படிதான் உலகில் நடைபெற்று வருகின்றன. சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைகிறது சந்திரன் இரவில்தான் தோன்றுகிறது சூரியன் ஏன் ஒரு நாள் கிழக்கிலும், மற்றொரு நாள் மேற்கிலும் தோன்றக் கூடாது? சூரியனும் சந்திரனும்சேர்ந்து ஏன பகலில் பிரகாசிக்கக்கூடாது? இவையெல்லாம் கவனிக்குங்கால் உலகில் இயங்கும் இயற்கையின் சக்திகளுக்கு ஒழுங்கு, நீதி, குறிக்கோள் முதலியன அவசியம் என்பது புலனாகின்றதன்றோ?

நிற்க, எம்பிரானவர்களும் தங்களின் உம்மத்துமார்களும் ஒற்றுமையாக ஒழுங்காக ஒரு திசை நோக்கி நிற்கும விஷயத்தில் கருத்து வேற்றுமையுள்ளவர்களாயிருந்து அவரவர் இஷ்டப்படி எத்திசையும் நோக்கி நின்று இறை வணக்கம் புரிந்திருப்பார்களேயானால், ஒழுங்கு நிலவியிருந்திருக்குமா? ஒற்றுமை ஏற்பட்டிருக்குமா? சத்தியம் தழைத்திருக்குமா? சன்மார்க்கம் ஓங்கியிருக்குமா? எல்லாக் காரியங்களும் இயற்கைக்கு மாறுபட்டதாகவல்லவோ நடந்திருக்கும். ஆகவேதான், எம்பிரானவர்களும், அன்னவர்களின் உம்மத்துமார்களும் திசை குறித்துக் கலக்கமுற்றிருந்த காலத்து இறைவன் ஒரு தெய்வீக வெளிப்பாட்டை இறக்கி அதன்மூலம் கஃபாவின் பரிசுத்தத்தன்மையையும், தொன்மையையும் விளக்கியுள்ளான் அன்றுமுதல் கஃபா உலகின் முதல் வணக்க ஸ்தலமாகக்கொள்ளப்பட்டு உலக முஸ்லிம்கள் கடவுளை வணங்குங் காலத்து அத்திசையை நோக்கி நிற்றல்வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டுள்ளனர். மேலும் இறைவனை வணங்குவதில் முஸ்லிம்கள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் உள்ளவர்கள் என்பதை எடுத்துக்காட்டவும் திசை குறித்து மக்களுக்கு எவ்விதச் சந்தேகமும தோன்றாதிருக்கவும் கஃபாவைக் குறிக்கோளாகக் கொண்டு, முன்னோக்கி நிற்கும்படி ஆஞ்ஞாபிக்கப்பட்டிருக்கின்றனர். இது விக்ரஹ வணக்கமாகுமா? கஃபாவில் மட்டும் இறைவன் இருக்கின்றான் என்ற எண்ணம் உதிக்க ஹேது வுண்டா? இல்லவேயில்லை. இஸ்லாம் ஒன்றுதான் பழங்காலந்தொட்டு இறைவனால் பரிசுத்தம் செய்யப்பட்ட மார்க்கம் எனவும், முதல் வணக்கஸ்தலம் கஃபா எனவும் மற்ற கிரந்தங்கள்கூட எடுத்தியம்புகின்றன.



ஈராக் மன்னர் பெய்ஸல் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த சமயம் ஜனாதிபதி ட்ரூமன் அவரை வெள்ளை மாளிகையில் வரவேற்றார்.




### இஸ்லாம் உலகப் பொதுச் சொத்து

அட்டாளச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அதிபர் ஐ எல் எம் மஜூர் அவர்கள் தலைமையில் இம்மாதம் 10ந் திகதி ஹாஜி வி. எம் ஷம்சுத்தீன் அவர்கள் ஓர் சொற்பெருக்காற்றினர். அவர் கூறியதாவது;- இன்று இஸ்லாம் மிக மோசமான நிலையிலிருக்கிறது காரணம் முஸ்லிம்கள் இஸ்லாமிய நெறியினின்று தவறிவிட்டார்கள் நாம் நமது சமூகத்தை முன்னிலைக்குக் கொண்டுவர மறுமலர்ச்சி பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. பேசுவதைச் செயலில் காட்டவேண்டும். சொல்லும் செயலும் ஒன்றாக வேண்டும் முதலில் நம் பள்ளிவாசல் நிர்வாகத்தை நல்ல நிலைக்காக்கவேண்டும் பெரியோர் என்று கூறப்படும் பலர் பள்ளிவாசல் சொத்துக்களை உண்டு கொழுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலை மாறவேண்டும். ஒவ்வொரு பள்ளிவாசலுக்கும் திறமையான "கதீபு" மார்கள் நியமிக்கப்பட வேண்டும். வயிறு வளர்ப்புக்கு அங்கு இடமிருக்கக் கூடாது. பெரும்பாலும் நம் நாட்டு அறிவுடைய மௌல்விமார்களையே 'கதீபு' மார்களாக நியமிக்கவேண்டும். அவர்களைச் சமூகம் தாழ்வாக மதிக்கவும் கூடாது அவர்கள் தாழ்வுமனப்பான்மைக்கு இடங்கொடுக்கவும் கூடாது. அரசாங்கம் கொண்டு வரவிருக்கும் 'வக்புச் சட்டத்தில் ஒரு கடுகளவு திருத்தமேயுண்டு. அதையும் திருத்திவிட்டால் இச் சட்டம் நிச்சயமாக இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு அடிகோலும். "வக்புச் சொத்தை உண்டு கொழுக்கும் "மச்சுவீட்டு மகான்கள்" முற்றாக எதிர்க்கத்தான் செய்வார்கள்: ஆனால் எதிர்காலத்தின் இளைஞர்களையர்கள் இதற்கிடங்கொடுக்கக் கூடாது. "இஸ்லாம் யார் வீட்டுச் சொத்துமல்ல. உலகப் பொதுச்சொத்து" பின் பி எஸ். மீரா அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.


## தானே இயங்கும் கைத்துப்பாக்கிகள்

### லைசன்ஸ் கிடையாது

முதலில் பாதுகாப்பு




6 வெடி கைத் துப்பாக்கி

நாடகத்திற்கும், சினிமாவிற்கும், அபாய காலத்தில் திருடர் பயத்திற்கும் மிக உபயோகமானது வெடி தீர்கும்போது புகையையும், நெருப்பையும் கக்குகிறது.

உண்மை கைத் துப்பாக்கியைப் போல் தோற்றமளிப்பது.

ஒரு டஜன் இனும் தோட்டாக்களுடன் விலை ரூபா 8-00. விசேஷ செம்பினாலான ஒகஸி டைஸ் 666ம் நம்பர் விலை ரூபா 10-00. பார்சல் தபால் செலவு ரூபா 1-2-0.

வேறு: ஒவ்வொரு ஆர்டருக்கும் ஒரு புட்டி ரிவால்வர் எண்ணெய் இனும்.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ்.

கிடைக்குமிடம்:

MESSFRS AMERICAN TRADING COMPANY,
(ɔ. T C.) Jullundur City (INDIA;

## மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதங்களானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிகவலையாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)

## கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11

Mfgrs: SEENU & CO., POST BOX. 1638. MADRAS-1

கிளை: 134, SERANGOON ROAD. சிங்கப்பூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### தேசிய சேமிப்பு இயக்கத்தில் தேசிய மொழிக்கு இழிவு

மட்டக்களப்பு நகரில் சென்ற 31-10-52ல் தேசிய சேமிப்பு இயக்கத்தாரால் ஓர் பாட்டுப் போட்டி நடைபெற்றது அப்போட்டியின் மத்தியஸ்தர்கள் தேசிய மொழியில் பாடிய பாடல்கள் யாவற்றையும் வெறுத்து ஆங்கிலப் பாட்டைத்தான் தேர்ந்தெடுத்தார்கள் இதிலே. தமிழ்ப் பாடல்களில் சுவையும் பொருளும் இல்லை, அல்லது தமிழ்ப் பாடல்களில் உள்ள சுவையையும் பொருளையும் அநுபவிக்க அம்மத்தியஸ்தர் (தமிழர்)களுக்குத் தெரியாது என இரண்டு உண்மைகள் புறப்படுகின்றன. அவற்றில் பிந்தியதுதான் சரியானது என நினைக்க இடமுண்டு. அப்படியானால் தீர்ப்பு நியாயமாகுமா?

மேலும் போட்டி நிர்வாகிகள் 'ஓர் பாட்டு மாத்திரம்' என்று பாடசாலைகட்கு அறிவித்து விட்டு, ஓர் நடிப்பை மேடைக்கு அநுமதித்து அந்நடிப்புக்கே பரிசும் வாங்கித் தந்தார்கள். பார்க்கப்போனால் "போட்டியாசிரியரின் தீர்ப்பே முடிவானது" என்பதுபோல இருக்கிறது இம்முடிவு. ஏனெனில் பரிசு பெற்ற பாட்டு (நடிப்பு) சபையோருக்கு இன்னதென்று ஒன்றுமே தெரியாது பலவழியிலும் மறைமுகமாய் தேசிய மொழியை இழிவுபடுத்தியது அந் நிர்வாகிகட்கே தகுதியா? இவற்றுக்கு யார் பொறுப்பு என்று கேட்கின்றோம்.

இங்ஙனம்
சரசு தம்பிராஜா
மட்டக்களப்பு

### க்ஷய நோயாளர் வேண்டுகோள்

வெளிசறை மார்பு நோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் தமிழ் பேசும் மக்களின் மன சமூக நல அபிவிருத்திக்காக ஓர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. நோயாளர் கவலையை மறந்து உற்சாகமாகத் தங்கள் பொழுதைக் கழிக்க புத்தகங்கள் சஞ்சிகைகள் பெரிதும் உதவிபுரிகின்றன. எனவே அனுதாபங் கொண்ட அன்பர்கள் ஒவ்வொரு புத்தகமாவது அனுப்பி வைத்தால் அது இந்நோயாளருக்கு பெரிதும் உதவியாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. புத்தகம் அனுப்ப விரும்பும் அன்பர்கள் காரியதரிசி தமிழ் மன்றம், வார்ட் இல: 4 வெளிசறை ஆஸ்பத்திரி ருகம என்னும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கும்படி தயவாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
மு. ஷம்ஷுத்தீன்
காரியதரிசி
தமிழ் மன்றம்
வெளிசறை ஆஸ்பத்திரி
ருகம


# சுதந்திரன்

SUTANTIRAN

194ஏ, தட்டாதெரு போன்: 3411

1952 நவம்பர் மீ 23உ


## நவம்பர் 28

புதிய அரிசிப் பங்கீடு புத்தகங்கள் வினியோகிப்பதற்காக நவம்பர் மாதம் 28ந் தேதி நாடு முழுவதும் ஆள் கணக்கெடுப்பு நடைபெறும். அதற்காக இப்பொழுது குடியிருப்போர் இடாப்புகள் வினியோகிக்கப்படுகின்றன

அன்று சுமார் 35000 குமாஸ்தாக்கள் வீடுவீடாகச் சென்று குடியிருப்போரைப் பற்றிய விவரங்களைச் சேகரிப்பார்கள். அதற்கேற்ப புதிய பங்கீடுப் புத்தகங்கள் வழங்கப்படும். இப்பொழுது அமுலில் இருக்கின்ற 12வது வரிசைப் புத்தகம் 1953ம் வருட மத்தியில் காலாவதியாகுமெனினும் தற்போதைய ஏற்பாட்டின்படி [illegible] இவ்வருடத்துடன் ரத்துச் செய்யப்பட்டுவிடும். புதிய கூப்பனுடன்தான் புத்தாண்டு பிறக்கும்

இக்கணக்கெடுப்பில் சட்டவிரோதமான முறைகளில் பங்கீடுப் புத்தகங்களை எடுத்திருக்கும் இந்தியர்கள் சிக்கிக் கொள்வார்களென்றும் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஒரு செய்தி கூறுகிறது சுமார் 6 லட்சம் பங்கீடுப் புத்தகங்கள் தவறானவர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது. அவர்களை இதுவரை கண்டுபிடிக்க முடியாதிருப்பது அரசாங்கத்தின் கையாலாகாத தன்மையைதான் நிரூபிக்கிறது அதிகப்படியாக ஆறு லட்சம் புத்தகம் ஏன் அச்சிடப்பட்டன என்பதற்கு இதுவரை அரசாங்கம் பதிலளிக்கவில்லை. பொதுத் தேர்தல் சமயத்தில் லட்சக் கணக்கான வாக்குச் சீட்டுகள் அதிகப்படியாக அச்சிடப்பட்டதைப்போல பங்கீடுப் புத்தகங்களும் அச்சிடப்பட்டன என்று கருதி திருப்தியடைய வேண்டும் போலும்!

அரசாங்கத்திடமிருந்த ஆறு லட்சம் புத்தகங்களும் மக்கள் கைக்கு எவ்வாறு சென்றன என்பதுதான் கேள்வி. யு. என். பி. அரசாங்கத்தில் உறைந்து கிடக்கும் ஊழலுக்கு இது நல்ல ஒரு உதாரணம் அதிகாரிகளிடையே காணப்படும் லஞ்சப் பழக்கம் தான் இத்தகைய வஞ்சகச் செயல்களுக்குக் காரணம் ஊழலே உருவான ஏகபோக முதலாளிக் கூட்டம் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும்வரை இம்மாதிரியான ஊழல்களை ஒழித்துக் கட்டுவது சாத்தியமன்று

ஆள் கணக்கெடுப்பில் இந்தியர் எதிர்ப்பும் கலந்திருக்கிறதென்று கருதப்படுவதால் இதன் மூலம் இலங்கைவாழ் இந்தியர்களுக்கு தொல்லை விளைவிக்க முடியுமென்ற பீதி அவர்களிடையே நிலவுகிறது அதன் விளைவாக இந்தியர்கள் கூட்டம் கூட்டமாக இந்நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்களென்பதை இந்திய ஹைகமிஷனர் காரியாலய அதிகாரியும் உணவு இலாகா அதிகாரிகளும், ரயில்வே அதிகாரிகளும் ஊர்ஜிதம் செய்கின்றனர் நெருப்பின்றி புகை கிளம்பாதல்லவா? அரசாங்கத்தின் சமீபகால நடவடிக்கைகளும் இம்மாதிரியான அச்சம் ஏற்படுவதற்கு ஆதரவாக இருக்கின்றன

ஆள் கணக்கெடுப்பின் போது சட்டவிரோதமாக பங்கீடுப் புத்தகங்கள் வாங்கியவர்களைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதினால், மற்றொரு ஆபத்தும் ஏற்படக் கூடும். நியாயபூர்வமாக, சட்ட ரீதியாக புத்தகங்கள் பெற்றிருப்பவர்களையும் சந்தேகப்பட்டு "சந்தேகப் பேர்வழிகளாக" கணக்கெடுத்து, சட்டபூர்வமாக அவர்கள் புத்தகங்களைப் பெற்றார்களென்பதை நிரூபிக்கும்படி கேட்கலாம்.

பல வருடங்களாக பங்கீடுப் புத்தகங்கள் இல்லாமலிருப்பவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் கள்ளக் குடியேற்றக்காரர்களாக இருப்பதினால்தான் அவர்களுக்கு புத்தகங்கள் கிடைக்கவில்லையென்று அரசாங்கம் அவர்களையும் சந்தேகிக்கலாம். சில வருடங்களுக்குமுன்பே தங்களின் புத்தகங்களைத் தவறவிட்டவர்கள் ஏராளமாக இருக்கின்றனர். அதனை நிரூபிக்கும்படி அவர்கள் கேட்கப்படுவார்கள். நிரூபிப்பதற்காக ஏழ்ந்த அத்தாட்சிகள் கொடுக்கப்பட்டாலும், வழக்கம்போல அவை நிராகரிக்கப்பட்டு அவர்களும் கள்ளக் குடியேற்றக்காரர்களின் ஜாபிதாவில் இடம்பெறலாம்.

ஆள் கணக்கெடுப்பின் விளைவாக புதிதாக வழங்கப்படும் பங்கீடுப் புத்தகங்களின் தொகை மிகவும் குறைந்துவிடுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதன் நேரடி விளைவு ஏராளமான பேர் பங்கீடுப் புத்தகங்கள் கிடைக்காமல் தவிக்க நேரிடுவதுதான். ஆகவே இது விஷயத்தில் [illegible] பாதமின்றி அரசாங்கம் [illegible] திற்கு ஆளாகாதிருக்குமென்று எதிர்பார்க்கின்றோம்.

## "மிருகத்தனமான பெரும்பான்மை"

பாராளுமன்றத்தில் யு. என். பியின் பெரும்பான்மை பலத்தைப் பற்றி கோப்பாய் பிரதிநிதி சென்ற வாரம் பாராளுமன்றத்தில் குறிப்பிடும்போது "மிருகத்தன்மையுள்ள பெரும்பான்மை" என்று கூறினர். இது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு அரசியற் பதம். எனவே அதைப் புரிந்துகொள்ள முடியாமல் நமது நிதி மந்திரி திண்டாடித் திணறிப் போனதோடு, திரு சுந்தரலிங்கத்தின் 'குண்டூசிக் குத்துக்கும்' ஆளாகிவிட்டார்.

பெரும்பான்மையில் எத்தனையோ தினுசுகள் உண்டு. அதாவது: சாதாரணப் பெரும்பான்மை, இயந்திரப் பெரும்பான்மை, ஜனநாயகப் பெரும்பான்மை, கதம்பப் பெரும்பான்மை இத்தியாதி. அவைகளோடு கோப்பாய்ப் பிரதிநிதியால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் "மிருகத்தனமான பெரும்பான்மையும்" இப்பொழுது சேர்ந்து விட்டது. மிருகத்தனமான பெரும்பான்மை' என்று ஒன்றிருக்குமாயின், மிருகத்தனமல்லாத—அதாவது மனிதத்தன்மையுள்ள ஒரு பெரும்பான்மையும் இருந்துதானே ஆகவேண்டும். ஆனால் அது இலங்கையில் கிடையாதுபோலும்!

'மிருகத்தனமான' என்ற பதம் "அநாகரீகமான" (அதாவது காட்டுமிராண்டித்தனமான) "பிற்போக்கான" என்றும் பொருள்படும், ஆகவே நாகரீக—அநாகரீக பெரும்பான்மைகள், முற்போக்கான—பிற்போக்கான பெரும்பான்மைகள் என்றெல்லாம்கூட அடுக்கிக்கொண்டே போகலாம்.

கோப்பாய்ப் பிரதிநிதி எதைக் கருத்தில்கொண்டு இவ்வாறு கூறினாரோ நமக்குத் தெரியாது. யு. என். பி பெரும்பான்மை மிருகத்தனமான (மனிதத்தன்மையற்ற) மனப்பான்மை கொண்டது என்று கருதினாரோ, அல்லது மிருகத்தைப்போன்று பகுத்தறிவில்லாதது (சிந்தனை செய்யும் சக்தியே கிடையாதது) என்று எண்ணினாரோ என்பதைத் திட்டவட்டமாக நாம் எப்படிக் கூற முடியும்? ஏன்—'மிருகத்தனமான (அநாகரீகமான) முறைகளில் பெற்ற பெரும்பான்மை" என்று கூட அவர் கருதியிருக்கலாமல்லவா? இல்லையேல், பிரஜாவுரிமைச் சட்டம்போன்ற காட்டுமிராண்டித்தனமான சட்டங்களை இயற்றும் பெரும்பான்மை என்ற அர்த்தத்திலும் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம். அவர் கருத்து எதுவாக இருந்தாலும் சரி, நியாயமான முறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட—மனிதத்தன்மையோடு சிந்திக்கும் ஆற்றல் படைத்த—முற்போக்கான பெரும்பான்மை அல்ல. யு. என். பி. பெரும்பான்மை என்பதை நிரூபிக்க ஆதாரங்களைத் தேடி அலைய வேண்டியதில்லை.

முன்பெல்லாம் யு. என். பி. பெரும்பான்மைக்கு "இயந்திரப் பெரும்பான்மை" என்று சொல்வதுண்டு. இயந்திரத்திற்கு ஆறறிவு கிடையாது. முடுக்கிவிட்டால் எதைப்பற்றி

(9ம் பக்கம் பார்க்க)

### உணவுக் கட்டுப்பாடு கணக்கெடுப்பு தினம் 1952 நவம்பர் மீ 28-ம் திகதி

1 தற்சமயம் வினியோகிக்கப்பட்டிருக்கும் 12-ம் தொடர் பங்கீட்டுப் புத்தகங்களுக்குப் பதிலாக கூடியசீக்கிரமான ஒரு திகதியில் வேறு ஒரு புதிய பங்கீட்டுப் புத்தகத்தை வழங்க உத்தேசம் செய்யப்பட்டிருக்கிறது. புதிய தொடர்ப் பங்கீட்டுப் புத்தகம் வழங்கப்படு முன்னால் 1952 நவம்பர் மீ 28-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்கு மிடையில் இலங்கை முழுவதிலும் ஜனத்தொகை கணக்கெடுக்கப்படும்.

2 கூடிய சீக்கிரத்தில் குடியிருப்பாளர் ஜாபிதாக்கள் வினியோகிக்கப்படும். எல்லாப் பிரதம குடியிருப்பாளர்களும் இந்தப் பாரங்களை குறிப்பிட்ட விதிகளின் படி உடனடியாகப் பூர்த்திசெய்து கணக்கெடுப்பாளருக்கு கணக்கெடுக்கும் திகதிக்கு முன்னாலேயே திருப்பி அனுப்புமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இம் மாதம் 24ந் திகதிக்கு முன் குடியிருப்பு ஜாபிதாக்கள் எந்த வீட்டுக்கு ஆகுதல் வினியோகிக்கப்படாவிட்டால் பிரதம குடியிருப்பாளர் உடனேயே, (கொழும்பு முனிசிப்பாலிட்டி) உதவி உணவு கட்டுப்பாட்டதிகாரியின் காரியாலயத்திற்கு, அல்லது தத்தம் கிராம அதிகாரி அல்லது டி. ஆர். ஓ. வுடன் ஆலோசனை செய்யவேண்டும்.

3 எல்லா நபர்களும் கணக்கு எடுப்பதற்கு வசதியாக, கணக்கெடுப்பு இரவில், கணக்கெடுப்பாளர் கேட்கும்பொழுது பங்கீட்டுப் புத்தகங்களைச் சமர்ப்பிக்கவும். பிரதம குடியிருப்பாளர் கவனிக்க வேண்டும். தவறுபவர்களுக்கு பங்கீட்டுப் புத்தகம் பெறுவதில் அதிக வசதியீனங்கள் பின்னால் ஏற்படும்.

4 குடியிருப்பு ஜாபிதாக்களில் தங்கள் ஒவ்வொருவரின் பேர் இருக்கிறதா என்பதையும் அவர்கள் நிரந்தர குடியிருப்பாளர்களா என்பதையும் ஒரு ஜாபிதாக்கு மேல் தங்கள் பேர் இருக்கக்கூடாது என்பதையும் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5 அரசாங்க உத்தியோகத்தர்களை நேரத்திற்குவீடு போய் சேரும்படிக்காக எல்லா அரசாங்க கந்தோர்களும் பிற்பகல் 3 மணிக்கு மூடப்படும். கணக்கெடுப்புத் திகதியன்று இதில் ஒத்துழைக்கு முகமாக முதலாளிமார்கள் அனைவரும், தம் வேலையாட்கள் சரியான நேரத்துடன் தம்வீட்டுக்குப் போய்ச் சேருவதற்கு உதவியாகமுன்னதாகவே, தம் அலுவலகங்களை மூடி விடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இத்தினத்தில் வசதிக்கு ஏற்றவாறு பொதுஜன போக்குவரத்து சேவைகளை, மாற்றிக் கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் ஏற்கனவே நடைபெற்றுவருகின்றன.

6 1952 நவம்பர் மீ 28-ம் திகதி கொண்டாட்ட ஏற்பாடுகளில்லாமலிருப்பது பெரிதும் விரும்பத்தக்கது.

எம் எல டி கூஸ்பெர்ஸ்
உணவுக் கட்டுப்பாட்டதிகாரியும் உணவுக்கமிஷனரும்
(கட்டுப்பாடும் வினியோகமும்)
கொழும்பு 7
1952 நவம்பர் 18ந் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருமதி சதாசிவத்தின் தொண்டையை நசுக்கினர்"

---o---

## கொலை சம்பவம்பற்றி வில்லியம் சாட்சியம்

**1951** அக்டோபர் 9-ந் தேதி திருமதி ஆனந்தா சதாசிவம் பம்பலப்பிட்டியில் தனது இல்லத்தில் கார் காரேஜுக்குள் கொலைசெய்யப்பட்டுக் கிடந்ததையொட்டி திரு சதாசிவம், வில்லியம் ஆகியோர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணை நடைபெற்றது.

பின்னர் வில்லியம் மன்னிப்பளிக்கப்பட்டு சர்க்கார் தரப்பு சாட்சியாக்கப்பட்டார். 17-11-52 ந் தேதி அவருடைய சாட்சியம் பதிவு செய்யப்பட்ட பிறகு வழக்கு அட்டோர்னி ஜெனரலுக்கு அனுப்பப்பட்டது.

திருமதி சதாசிவம் கொலை வழக்கு விசாரணை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் திரு என். எம். ஜே ராஜேந்திரன் முன்னிலையில் இம்மாதம் 17-ந் தேதி நடைபெற்றபொழுது வில்லியம் அளித்த வாக்குமூலத்தின் சுருக்கம்:

9-10-52 ந் தேதி காலை நான் சமையலறைக்குச் சென்று ஒரு தேங்காயை உடைத்து அதைத் துருவிக்கொண்டிருந்தேன்.

அவ்வமயம் எதிரி சமயலறைக்குவந்தார் தமது மனைவியைக் கொன்றுவிடுவதற்கு உதவி செய்யவேண்டுமென எதிரி என்னிடம் கேட்டார். நான் பதினொரு நாள் இந்த வீட்டில் வேலை பார்த்திருக்கிறேன். என்னுடைய வேலைக்குச் சம்பளந் தரவேண்டாம், என் கையைவிட்டுவிடுங்கள். நான் போய்விடுகிறேன் என்று நான் சொன்னேன் "நீ பயப்படாதே" என்று எதிரி என்னிடம் கூறி ரூபாய் 300 அல்லது ரூபாய் 400 பெறுமதியுள்ள சாமான்களை எனக்குத் தருவதாகவும் வாக்களித்தார். காலஞ் சென்றவரின் தொண்டையை எதிரி தமது வலது கரத்தால் இறுகப்பற்றிக் கொண்டு தலை முடியை இடது கையால் பிடித்துக் கொண்டார். காலஞ் சென்றவர் மல்லாக்காகக் கீழே விழுந்தார்.

அவ்வமயம் எதிரி காலஞ்சென்றவரின் தொண்டையைப் பலமாக நசுக்கினர். அவ்வமயம் எதிரியின் ஒரு முட்டங்காலின் கீழ் காலஞ்சென்றவரின் கரங்களிலொன்று இருந்தது. இந்த நிலைமையில் காலஞ் சென்றவர் தமது கரத்திலொன்றாலும் கால்களாலும் அங்குமிங்கும் தரையில் உதைத்துக் கொண்டிருந்தார் அவ்வமயம் எதிரி 'பிசாசே வந்து பிடி' என்று என்னிடம் சப்தமிட்டுத் தெரிவித்தார். நான கீழே குந்திக்கொண்டு காலஞ்சென்றவரின் இடுப்பை எனது இரு கரங்களாலும் பிடித்தேன். அங்குமிங்கும் அசைந்துகொண்டிருந்த காலஞ்சென்றவரின் கரம் எனது இடது கன்னத்தைப் பிடித்தது. அதையும் விடுவித்துக் கொண்டேன். நானும் எதியும் பின்னர் எழுந்தோம் எதிரி எழுந்த பிறகு தமது பாதத்தால் காலஞ்சென்றவரின கழுத்தில் மிதித்தார். அந்த நிலைமையில் தொண்டை நசுங்கிவிட்டது. கழுத்து ஒரு பக்கமாக வளைந்துவிட்டது

வழக்கை அட்டோர்னி ஜெனரலுக்கு அனுப்புமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவளித்தார்.

### மிருகத்தன......

(8ம் பக்கத் தொடர்ச்சி)

யும் சிந்திக்காமல் தன் பாட்டில் இயங்கிகொண்டிருக்கும். அம்மாதிரி யு. என். பி பெரும்பான்மையும் முடுக்கிவிடப்பட்டால், நீதி, அநீதிகளைப்பற்றிச் சிந்திக்காமல் கையைத் தூக்கிக் காட்டும் என்ற அர்த்தத்தில் "இயந்திரப் பெரும்பான்மை" என்று கூறப்பட்டது.

ஆனால் இந்தப் பெயரையும் தூக்கி அடித்துவிட்டது கோப்பாய்ப் பிரதிநிதியால் சூட்டப்பட்டிருக்கும் இப் புதிய பெயர்.

யு என். பி. பெரும்பான்மையை இவ்விரண்டில் எந்தப் பெயரால் அழைக்கலாம் என்று சில சந்தேகப் பிரகிருதிகள் ஒரு சங்கடமான கேள்வியை எழுப்பலாம். இதில் நாம் தீர்ப்புக்கூறத் தயாராயில்லை. ஏனெனில் கோர்ட் தீர்ப்புகளையே முறியடிப்பதற்குச் சட்டம் செய்யக்கூடிய ஒரு 'ஜனநாயக' ஆட்சியில் எந்த ஒரு விஷயத்தைக் குறித்தும நாம்தீர்ப்புக்கூறுவதற்கு சற்று அச்சமாகத் தான் இருக்கிறது. ஆகவே யு என். பி. பெருமபான்மையை அவரவர் இஷ்டம் போல எந்தப் பெயரால் வேண்டுமானாலும் அழைத்துக்கொளளட்டும்.

—முனா.

### உணவுக்கட்டுப்பாடு

### ஆள் கணக்கெடுப்புத் தினம்-28 நவம்பர் 1952

1952 நவம்பர் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்குமிடையில் உணவுக் கட்டுப்பாடு விஷயமாக தீவு முழுவதற்குமான ஆள் கணக்கெடுப்பு நடைபெறும் தருணத்தில் பொதுமக்கள் முடிந்தவரை தங்கள் வழக்கமான இருப்பிடத்தில் தங்கியிருக்குமாறு கோரப்படுகின்றனர்.

2. குடியிருப்பாளர் ஜாபிதாக்கள் தீவு முழுவதிலும் இப்போது விநியோகிக்கப்படுகின்றன. பிரதம குடியிருப்பாளர்கள் தயவு செய்து இதை கட்டாயமாகவும், சரியாகவும் நிரப்பவும். 24-ம் திகதிக்குள் குடியிருப்பாளர் ஜாபிதா ஒரு வீட்டுக்கு விநியோகிக்கப்படாதிருந்தால், பிரதம குடியிருப்பாளர் தயவு செய்து உடனடியாக உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி (கொழும்பு முனிசிபல் சபை)க்கு அல்லது கிராமத் தலைவர் அல்லது தங்கள் பகுதியிலுள்ள D. R. O. வுக்கு அறிவிக்கவேண்டும்.

3. ஒவ்வொரு நபரும் தயவுசெய்து தனது பெயர் நிரந்தரமாகத்தான் வசிக்குமிடத்திலுள்ள குடியிருப்பாளர் ஜாபிதாவில் இடம் பெறும்படி செய்தல் வேண்டும். ஆனால் ஒன்றுக்கு மேலதிகமான ஜாபிதாக்களில அவர்கள் பெயர் இடம்பெறக் கூடாது, நிரந்தரமாக வசிக்குமிடம் என்பதற்கு "வழக்கமாக அவர் தங்குமிடம் என்று அர்த்தமாகுமே யொழிய தாங்கள் பிறந்த இடம், கிராமம் அல்லது பெற்றோரின் வீடு என்று அர்த்தமாகாது.

4. அரசாங்க காரியாலயங்கள் ஆள் கணக்கெடுப்பு தினத்தில் பிற்பகல் 3 மணிக்கு மூடப்படுவதுடன் பொதுஜன வாகனப் போக்குவரத்தும் அதற்கேற்ப திருத்தியமைக்கப்படும். எல்லா தனிப்பட்ட ஸ்தாபன சொந்தக்காரர்களும் இதற்கு அனுசரணையாக (அன்றைய தினம் நேரத்துடன் தங்கள் வியாபார ஸ்தலங்களை மூடிவிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

5. தற்போது ரேஷன் புத்தக விநியோகம் நடைபெறுவது போலவே ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக புது சீரிஸ் ரேஷன் புத்தகமும் தொடர்ந்து விநியோகிக்கப்படும்.

எம எல் டி காஸ்பேர்ஸ்
உணவுக்கட்டுப்பாட்ட
[illegible]
(கட்டுப்பாடும் விநியோகமும்)
கொழும்பு 7, 20 நவம்பர் 1952

### அ. ஆ அறப்போரில் ஒரு வெற்றி


போர்ட் எலிஜபெத் (தெ ஆ) நியூபிரைட்டன்ரயில்வே ஸ்டேஷனில் இன ஒதுக்கல் முறையை ரத்துச் செய்யுமாறு ரயில்வே அதிகாரிகளைக் கேட்பது என போர்ட் எலிஜபெத் நகர சபைதீர்மானித்திருக்கிறது


அன்புள்ள ஐயா!

தாங்கள் அனுப்பிய எஸ். பி எஸ் பதிமருந்தால் சகல வியாதிகளிலிருந்தும் பூரண சுகமடைந்தேன். மற்றும் பலர் இம்மருந்தினால் நல்ல சுகமடைந்திருக்கிறார்கள்.

ஆகையால் இம்மருந்தை உற்பத்தி செய்பவர்களுக்கும், தங்களுக்கும் எனது நமஸ்காரம்.

இப்படிக்கு,
எஸ். சொள்ளமுத்து கங்காணி.
விக்லோ ஹில்ஸ்,
போவிட்டிய மல்லை டிவிஷன்,
வண்டுரம்பை போஸ்ற்று, 17-6-52.




இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றது

**எஸ். பி. எஸ்.**
**பதி மருந்து**

இதனால் தீரும் நோய்கள

ஜுரம் தலைபாரம் தலைவலி தலைசுற்றல் சளி இருமல் க்ஷயம் அஜீரணம் அஜீரண வயிற்றோட்டப் புளியேப்பம் மந்தம் வயிற்றுப்போக்கு வயிற்றிரைச்சல் வயிற்றுவலி வயிற்று உப்பிசம் பசியின்மை வாய் நாற்றம் இழுப்பு ஜன்னி காக்கைவலிப்பு பித்தரோகம் பெலவீனம் அசதி காமாலை கைகால் பிடிப்பு பாரிசவாய்வு அண்டவாய்வு குத்தல் எல்லாவித வாதரோகங்கள் பிளேக் காலரா இன்புளுயன்சா ஸ்திரீகளுக்கு உண்டாகும் சூதகவாய்வு சூதகஜன்னி சூலைக்கட்டு குழந்தைகளுக்கு மாந்தம் வயிற்றோட்டம் ஜன்னி, ஜலதோஷம் கக்குவான், இருமல் இவைபோன்ற சகல வியாதிகளுக்கும் கைகண்டமருந்து.

இந்த ஒரே மருந்து சகல வியாதிகளையும் குணமாக்குகிறது. உள்ளும், புறமும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு புட்டியிலும் உபயோக விபரம் அடங்கியிருக்கிறது.

**இம்மருந்தை லட்சக்கணக்கானமக்கள் உபயோகித்து சுகமும், சுபீட்சமும் பெற்றுள்ளனர்.**

குறைந்த விலை! நிறைந்த குணம்

**புட்டி 1க்கு ரூ.1-25.** தபால் செலவு வேறு

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கவனிப்பு:- எங்கள் எஸ். பி. எஸ். பதிமருந்து வாங்குபவர்கள் ஏழு முக முத்திரை இருக்கிறதா என்று கவனித்துப்பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தயாரிப்பவர்கள்:- எஸ். பீ. எஸ. ஜெயம் அன் கோ,
வேல் கெமிக்கல் ஒர்க்ஸ், மதுரை

இலங்கை சோல் ஏஜண்டுகள்:—

**எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ,**

34, செட்டியார்தெரு, கொழும்பு 11.
ஹெட் ஆபீஸ்:- 193, காலி ரோடு, கொள்ளுப்பிட்டி
Telephone: 6019 கொழும்பு (3;
Telegram: Jayajeevi, Colombo.




**இரும்புப்பணப் பெட்டிகள்**

---o---

லண்டன் நகர ஜோண்டான் லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை.

1795-ம் ஆண்டில் ஸ்தாபிதம் - மிகப் பழைய ஸதாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப் படவில்லை



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை

**டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.**

ஆபீஸ் பொருட்கள் விற்பனை பகுதி
18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை கொழும்பு
போன்: 2301


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

# சகோதரி

"நாவேந்தன்"

இரவு எட்டு மணிக்குக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட புகைவண்டி 'கட, கட' வென்ற சப்தத்துடன் 'அடித்துப் பறந்து' கொண்டிருந்தது ஒரு மூன்றும் வகுப்புப் பிரயாண வண்டியுள் ஏறியிருந்த நான், எனது பெட்டி, படுக்கைகளைச் சரி செய்து ஒழுங்காக அமைத்த பிறகு காலை நீட்டிப் படுத்துக்கொண்டே ரயிலுக்கு வரும்பொழுது வாங்கிவந்த ஒரு மாத சஞ்சிகையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன்

நான் ஏறியிருந்த பெட்டியுள் ஒரே ஒரு பெரியவர் மாத்திரம் அமர்ந்திருந்தார் அவரும் ரயில் நகர ஆரம்பித்ததுமே மெதுவாகத் தூங்கத் தொடங்கிவிட்டார்.

ஃ

கொழும்பிலே ஒரு தினப் பத்திரிகையின் நிருபராக நான் வேலைபார்த்தேன். இருந்தாற்போலிருந்து என்னை யாழ்ப்பாணப் பகுதிக்கு விசேட நிருபராகப் போகும்படி ஆசிரியர் உத்தரவிட்டுவிட்டார். வேறு வழியின்றிப் புறப்பட்டுவிட்டேன். எழுதிப் பிழைப்பவர்களின் வாழ்க்கை அத்தனை சுலபமானதல்லவென்றுதான் உலகத்துக்குத் தெரியுமே!

ஏதோ ஒரு ஸ்டேஷனில் ரயில் நின்றது. ஆக மொத்தம் நாலோ ஐந்து பேரோ தான் அந்த ஸ்டேஷனில் ரயிலேறியிருப்பார்கள்

நான் உட்கார்ந்திருந்த பெட்டியின் உட்பக்கமாக என் கண்ணோட்டத்தைச் செலுத்தினேன். வாட்டசாட்டமான தோற்றமுடைய அந்த இளைஞன் முதல் முறையாக என் கண்ணில் பட்டான்

கையிலேயுள்ள தலையணையை 'ஸீட்'டின்மேல், ஓர் அந்தத்தில் நேராகத்திவைத்துவிட்டு லாவகமாக அதன் மேல் சாய்ந்துகொண்டு ஏதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தான் வாலிபனின் கவனத்தை என் பக்கம் திருப்புவதற்காக "ஏன் ஸார், யாழ்ப்பாணந்தானே வருகிறீர்கள்?" என்று ஒரு கேள்வியைப்போட்டுவைத்தேன்!

"ஸார், அகிலம் முழுதுமே எனக்குச் சொந்தந்தான் நான் எங்கே போகிறேனென்று எனக்கே இப்பொழுது தெரியாது"

தான் கூறிய பதிலில் ஏதோ ஒரு பெரிய உண்மையை வெளியிட்டுவிட்டவன்போல் அவன் உரத்துச் சிரித்தான்! எனக்குத் தலை சுழன்றது. போயும் போயும் ஒரு 'பைத்தியத்துடனே ஒரு இரவைக்கழிப்பதென்றால் அவ்வளவு சுலபமான விடயமா அது?

"என்ன ஸார், சிந்தனை செய்கிறீர்கள்? என் பேச்சு உங்களுக்குப் பைத்தியக்காரத்தனமாப் படுகிறதோ இல்லியோ?" என்று கேட்டுவிட்டு அவன் மீண்டும் அதே பயங்கரச் சிரிப்புச் சிரித்தான்.

"இந்த உலகத்திலேயே நேர்மையாகவும், குழந்தை உள்ளத்தோடு பழகுகிற எவனும் இன்றைய நாகரீக மனிதர்களின் கண்ணில் பைத்தியக்காரனாகத்தான் தோன்றமுடியும்!"

நான் வாய்விட்டு இந்த வார்த்தைகளைக்கூறினேன்

"ஆமாம் ஸார், நீங்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை! நான் கூட இப்படி நடந்துகொண்டதாலேயே பைத்தியக்காரனாகி விட்டேன். என் குழந்தை உள்ளம் அவளை—என் சகோதரி சரசாவை அநியாயமாகச் சாகடித்துவிட்டது"

அவனுடைய துன்பமயமானவாழ்வுச்சரித்திரத்தை யறிய என் மனந் துடி துடித்தது. 'அது யார் ஸார், சரசா? அவள் உங்கள் உடன் பிறந்த சகோதரியா? உங்கள் குழந்தை உள்ளத்தினால் அவள் எப்படி அநியாயமாகச் சாக முடிந்தது ஸார்?' என்று என் வாய் தானாகவே கேள்விகளைக் கேட்க ஆரம்பித்துவிட்டது.

"சரசா, அவள் என் உடன் பிறந்த சகோதரியில்லை. ஆனால் நான் அவளை என் உடன் பிறந்த சகோதரியிலும் பார்க்க ஆயிரம் மடங்கு அதிகமான அன்புடன் நேசிக்கிறேன்.

ஃ

"அப்பொழுது எனக்கு வயது இருபத்திரண்டு யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து ஏறக்குறைய இருபத்தொரு மைல் தொலைவிலிருக்கிறது நான் பிறந்த கிராமம் அந்தக் கிராமத்தில் செல்வச் சிறப்புடன் விளங்கிய எனது பெற்றோருக்கு நான் ஏக புத்திரன். ஆனால் காலதேவன் இன்ப, துன்பங்களைப் பகடைக் காய்களாக உபயோகித்துச் சூதாட்ட வரும்பொழுது செல்வர் வறியராகவும் வறியர் செல்வராகவும் மாறிவிடாமல் என் செய்வர்? என் தகப்பனார் தமது வியாபாரத்தில் நேர்ந்த ஒரு பெரும் மாற்றத்தின் விளைவு தெரியுமுன்னரே மரண தேவனை நண்பனாக்கிக் கொண்டு மறைந்து விட்டார். அவர் இறந்த சோகத்திலேயே என் தாயும் ஒரு நாள் அந்தக் காலனுலகுக்குப் பயணமாகிவிட்டாள். என் இளம் உள்ளத்திலே அன்றுதான் . சோகத்தின் சாயல் துளிர்விட ஆரம்பித்தது. கிடந்த நிலபுலம் எல்லாவற்றையும் விற்றுத் தகப்பனார் . பட்டுவைத்திருந்த கடனை அடைத்துவிட்டு யாருமற்ற அநாதையாகவே பட்டினத்திற்கு வந்துவிட்டேன் அதலிருந்து என் வாழ்வு நாடகத்தில் இரண்டாம் காட்சி ஆரம்பமானது.

பட்டினத்தில் என் வாழ்வு 'சப்'பென்ற நிலையிலேயே நகர்ந்தது. நான்கு வருடங்கள் உருண்டோடின. ஆங்கிலம் எஸ். எஸ். ஸி. சித்தியெய்தியதுடன் அதற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு ஒரு தமிழ் ஆசிரியராக முயற்சித்தேன். அதுவும் சுலபமாக்கைகூடிவிட்டது நான் பெரிய கலாசாலையினின்று வெளிவந்ததும் ஒரு கல்லூரியில் தமிழ் வாத்தியாராக உத்தியோகம்பார்க்க ஆரம்பித்தேன்'

அப்பொழுதுதான் சரசா என் வாழ்வில் குறுக்கிட்டாள் நான் உத்தியோகம் பார்த்த கல்லூரியில் ஆண்களும் பெண்களும்சேர்ந்தே படித்தனர். பெண்கள் வகுப்புப் பிரதம தமிழ் ஆசிரியை சரசா. அவள் தோற்றமும் இனிய சுபாவமும் என் இளம் உள்ளத்தில் ஏதோ ஒரு இனந் தெரியாத உணர்ச்சியைக் கிளப்பிவிட்டன. பாடஞ் சொல்லிக் கொடுப்பது சம்பந்தமாக அவள் என்னுடன் உரையாடும் பொழுதெல்லாம் நான் விவரிக்க வொண்ணு மகிழ்ச்சியடைவேன் நாளடைவில் நாங்களிருவரும் மனம்விட்டுக் கதைக்கப் பழகிக் கொண்டோம். எங்களிடையே ஒரு 'பாசம்' எதைக் குறிக்கோளாகக் கொண்டோ தெரியாது தோன்றி நாளொரு வண்ணமும் பொழுதொரு புதுமையுமாக வளர்ந்தது. அந்தக் கலாசாலையிலே நாங்களிருவரும்தான் உண்மை அன்புடன் ஒருவரோடொருவர் உரையாடுகின்ற மனிதப் பிறவிகள், மற்ற ஆசிரியர்களெல்லாம் நவ நாகரீகத்தின் "அவதாரங்க"ளாக ஏதோ ஆகாயத்திலிருந்திறங்கியவர்கள் போல ஒருவரோடொருவர் பட்டதும் படாததுமாய்க் கதைத்துக் கொள்வார்கள் அந்தச் சூழ்நிலையிலே சரசாவின் நட்பு எனக்கு இதமானதாக இருந்தது என்று கூறத் தேவையே இல்லை.

நாளடைவில் நான் சரசாவை-பற்றியும் அவள் குடும்பத்தைப் பற்றியும் அவள் மூலமாகவே நன்கு அறிந்து கொண்டேன்.

எங்கோ ஒரு கிராமத்திலே ஏழைப் பெற்றோருக்கு ஏக புத்திரியாகப் பிறந்தவள்தானும் அவளும் உள்ளதையெல்லாம் விற்றுத் தமது ஒரே மகளை உத்தியோகமாக்கிய அவளின் தகப்பனார் ஒரு நாள் இருந்தாற்போலிருந்துவிட்டு மரணமடைந்துவிட்டாராம் தாபரிக்க ஒருவருமற்ற நிலையில் தாயையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்து பட்டினவாசஞ் செய்வதாகச் சரசா கூறினாள்!

ஃ

ஏறக்குறைய அவள் கதையும் என் கதையும் எல்லா விதத்திலும் ஒற்றுமையாகத்தானிருந்தன. ஏன் எதிர்கால வாழ்விலுங்கூட அவளும் நானும் ஒற்றுமையாக—உடன் இருக்கக் கூடாது என்று நான் எண்ணமிட ஆரம்பித்தேன் என் கதையும்தான் அவளுக்குத் தெரியுமே. அவள் இதை மறுக்கமாட்டாள். நீங்களிருவரும்தான் ஏற்ற "ஜோடி"கள் என்று [illegible] என் எண்ணத்தை ஒரு விதமான துணிச்சலுடன் அவளிடமே ஒரு நாள் வெளியிட்டுவிட்டேன் அவளுந்தன்டான மகிழ்ச்சிக்கோ அளவில்லை நீங்கள் இன்றுதான் என் அன்பைப் புரிந்துகொண்டீர்கள்" என்று சொல்லிச் சிரித்தாள்!

காலம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் நட்புப் நன்றாக இடைவெளியின்றிச் சமீபித்துக் கொண்டுவந்தது. ஒருநாள் அவள் கேட்டாள் "இத்தனை நாளாக நாம் அந்நியோன்னியமாகப் பழகுகிறோமே ஒரு நாளாவது என் வீட்டுக்கு வரக்கூடாதா?" என்று. நான் தடை சொல்வேனா? சம்மதித்துவிட்டேன்.

அன்று வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணியிருக்கும். நான் சரசாவின் வீட்டுக்குப் போனேன். வாசலில் என்னைக் கண்டதும் சரசா புன்னகையுடன் வரவேற்றாள் அவள் தாயாருக்கு என்னை அறிமுகப் படுத்தினாள். அவளும் தன் 'வருங்கால மாப்பிளையாகிய" என்னை உவகையுடன் வரவேற்றாள். அவர்களுக்குத் தெரியுமா காலச் சூழ்நிலைக்கேற்ப மனித வாழ்வு பயங்கரமாகப் பாதிக்கப் படுகிறதென்று? உபசாரத்திற்குக் குறைவேயில்லை. எல்லாம் "தடபுடலா"யிருந்தது. அற்ப மனிதப்பிறவிகள் வாழ்க்கை நிலத்தில் மகிழ்ச்சி நீர் சிறிது ஊறியவுடன்தான் எத்தனை மனக் கோட்டைகள் கட்ட ஆரம்பித்து விடுகிறார்கள்?

எங்கள் சம்பாஷணை எங்கெல்லாமோ சுற்றிச் சுழன்று கடைசியாக முற்றிற்று நேரம் இரவு பத்து மணி. விடுதிக்குப் புறப்பட நான் ஆயத்தமானேன். சரசாவும் தாயும் கெஞ்சி மன்றாடி என்னைத் தடுத்துவிட்டனர். இரவுச் சாப்பாட்டையும் அங்கேயே முடித்துக் கொண்டு படுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

சரசாதான் உணவு பரிமாறினாள்! அது யுகதகாலம்!! மூன்று நேரமும் சோறு சாப்பிட ஏழைத் தமிழாசிரியர்களுக்கு ஏது வசதி? என்றாலும் நல்ல அரிசிமாவாலான 'இட்லி'யைச் சரசா என் இலையில் வரிசையாக அடுக்கிய போது என்மனம் குளிர்ந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். ஒவ்வொன்றாக எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தேன். நான்கு வருடங்களாக ஆருமில்லாத அநாதையாக ஹோட்டல் சாப்பாட்டைத் தின்று குமைந்துகொண்டிருந்த எனக்கு அந்த 'இட்லி'கள் தேவாமிர்தமாக இனித்தன என் மனதில் கடந்தகால எண்ணங்கள் புற்றீசல்கள் போலக் கிளம்பின. நான்கு வருடங்களுக்குமுன் இதே வெள்ளிக்கிழமை என் தாய் 'இட்லி'கள் நிறைந்த கோப்பையை என்முன்னே நகர்த்திவிட்டு "சாப்பிடடா தம்பி" என்று பாசம் பரவம் பணித்த காட்சி என் மனக்கண் முன் வந்து நின்றது என்னையறியாமலே என் கண்கள் நீரைச் சிந்தின வாய்விட்டு அழ முடியாத நிலைமை. இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. சரசா இதனை அவதானித்துவிட்டாள். "ஏன் சாப்பிடும்போதுகூட அழுகிறீர்கள்? அவள் குரலில் அன்பு—பாசம் வெளிந்து குழைந்தன. "ஒன்றுமில்லை!" வேண்டுமென்றே ஒரு பொய்யைச் சிருஷ்டித்துவிட்டேன். ஆனால் சரசாவின் செய்கை எனக்குப் புதிராகவிருந்தது. ஓடோடியும் வந்து தன் முந்தானைச் சேலையால் என் கண்ணீரைத் துடைத்தாள். அவள் செயல் . படித்துப் பட்டம்பெற்று உத்தியோகம் பார்க்கும் ஒரு நவீன யுவதியின் செயலாக எனக்குப் படவில்லை. எண்ணத்தை வெளியிடும் சக்தியைக் கூட நா இழந்துவிட்டது. அடித்துவைத்த கற்சிலைபோல அசையாமலிருந்தேன். ஆனால் மனம் மாத்திரம் ஏதோவெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தது சரசா 'காப்பி' போட்டுக் கொணர்ந்து தந்தாள். பேசாமல் வாங்கிக் குடித்தேன். கடைசியாகப் படுக்கைக்குப் போகும்போது மாத்திரம் சரசா சொன்ன அந்த வார்த்தைகள் இப்பொழுதும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை ஏழேழு யுக யுகாந்தரங்கள் மாறினாலும் என் செவிகள் ஒலித்துக் கொண்டுதானிருக்கும்!

"இந்த ஏழையை மறந்துவிடாதீர்கள்! நீங்கள்தான் என் துணைவர்—துணைவராக வேண்டும் என் வாழ்வு உங்கள் கையில் இன்றைக்கே வந்துவிட்டது"

"இப்படியும் ஒரு படித்த பெண் தன்னை ஒரு ஆடவனுக்குப் பூரணமாக "அடிமை" யாக்குவாளோ?" என்று என் மனம் அங்கலாய்த்தது. "அதுதான் பழந்தமிழ்ப் பெண்களின் வழிவந்த பண்பு—காதல்" என்று முழங்கியது அறிவு. பேசாமல் தூங்கச் சென்றுவிட்டேன்.

ஃ

அடுத்தநாள் கல்லூரியில் ஒரு பெரிய அதிர்ச்சி எங்களைக் காத்திருந்தது. கல்லூரி அதிபர் சிறிது முகவாட்டத்துடனேயே

(15ம் பக்கம் பார்க்க)

தேவை

ஜொப் கொம்பாஸிடர்களும், பிளேட்டன் மெஷின் மைண்டர்களும் உடனே தேவை

நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும்

மானேஜர்,

சுதந்திரன் பிரஸ்

194 ஏ, டட்டாதெரு, கொழும்பு-12

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பிரஜாவுரிமை பெறமுடியாதவர்கள்

# "தற்காலிக வாச பர்மிட்" எடுக்க வேண்டும்

## பிறகு அவர்களும் வெளியேற்றப்படலாம்

### ஹைகமிஷனர் அம்பலப்படுத்துகிறார்

"பிரஜாவுரிமை பெறமுடியாத இ. இந்தியர்கள் தற்கால வாச பர்மிட் எடுக்க வேண்டும். பின்னர் அவை புதுப்பிக்கப்படாமல், அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வெளியேற்ற முடியும்" என்று தற்காலிக இந்திய ஹைகமிஷனர் சென்னையில் ஒரு பேட்டியில் கூறினார்.

"இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கையின் விளைவாக பல லட்சக்கணக்கான இந்தியர்கள் 'தற்கால வாச பர்மிட்' எடுக்கும்படி கட்டாயப்படுத்தப்படுவார்கள்" என்று இலங்கையில் தற்காலிக இந்திய ஹைகமிஷனர் திரு ஆர். டி. சாரி சென்னையில் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

திரு சாரி மேலும் சொன்னதாவது:—"இவ் வாச 'பர்மிட்' வைத்திருப்போர் வேலையிழக்கும்போது அரசாங்கம் இந்தியாவுக்குத் திருப்பியனுப்ப முடியும். தற்கால வாசபர்மிட்டுகளை புதுப்பிக்க மறுத்து அவர்களைப் பலாத்காரமாக வெளியேற்ற அரசாங்கத்தினால் முடியும்"

"இ. இ. காங்கிரஸ் கூறுகிறபடி 7½ லட்சம் இ. இந்தியர் பிரஜாவுரிமை பெற முடியாத நிலைமையிலிருக்கிறார்கள். அவர்கள் "தற்காலவாச பர்மிட்" எடுக்கும்படி கட்டாயப் படுத்தப்படுவார்கள் அப்பர்மிட்கள் காலாவதியானவுடன் அவைகளைப் புதுப்பிக்க அரசாங்கம் மறுக்கலாம்"

"இலங்கை இந்தியர் பிரச்னை தென்னாபிரிக்கப் பிரச்னையைவிட சிக்கலானதும் கஷ்டமானதுமாகும்"

## சுருட்டுத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

வட இலங்கையில் கூலி உயர்வு கோரி சுருட்டுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். கூலியை உயர்த்த சில முதலாளிகள் சம்மதித்ததன் விளைவாக அந்த இடங்களில் மட்டும் தொழிலாளர் வேலைக்கு திரும்பியிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இந்தப் போராட்டத்தில் சுருட்டுத் தொழிலாளர் சங்கங்கள் ஒற்றுமை அணி வகுத்து நடவடிக்கை எடுத்து வருகின்றன. அரசியல் அபிப்பிராய பேதங்களுக்கு இடமளிக்காமல் அனைவரும் இப்போராட்டத்தை ஆதரிக்கின்றனர். தொழிலாளர்கள் பலத்த ஒற்றுமை காண்பிப்பதால் போராட்டம் நிச்சயமாக வெற்றிபெறுமென்று கூறப்படுகிறது.

## பாரூக்கின்.........

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து மக்களிடம் பேசியிருக்கிறாள் அவள்மீது மக்களுக்கு அபாரமான பிரேமையும் அன்புமிருந்து வந்தது. அரண்மனை சம்பந்தமான விஷயங்களைப் பகிரங்கமாக மக்கள் விவாதித்த சமயங்களில் பரீதா வெளி உலகில் முகத்தைக் காட்டுவதேயில்லை எகிப்திய மக்களில் எவரும் அவளைப் பார்த்ததுமில்லை பல்லாண்டுகள்வரை வெகு கஷ்டமான வாழ்க்கை நடத்திய பின்னர் விவாகரத்து நடைபெற்றது.

### மறுமண உத்தேசமில்லை

விவாகரத்துக்குப்பின் அரண்மனை சொத்துகளுக்குப் பதிலாக 30 000 பவுன் வருஷ வருமானமுள்ள 1 880 ஏக்கர் நிலத்தைப் பரீதாவுக்குப் பாரூக் ஒதுக்கி வைத்ததுடன் அவருடைய பெரிய நகைகள் எல்லாம் அவளிடம் திருப்பித்தர இசைந்தார் கடைசிக் குமாரியான பதய்யா வுக்கு ஏழு வயதாகும்வரை தாயிடமே இருக்க பாரூக் அனுமதித்தார்.

ஸிடனிரோடின் என்ற வெளியர்டம் பரீதாவை தகப்பனார் ஜுல்பிகார் பின்வருமாறு கூறினார்:—

பதய்யா தனது தாயிடமிருந்து பிரிக்கப்பட்டது தான் பேரிடி போன்றது. பேப்ரிலிருந்து பெரிய புதல்வி பெரியால் வரைந்த கடிதம் ஒன்று குறிப்பிடத்தக்கது;

அன்பார்ந்த அன்னைக்கு—

உங்களைக் கண்டு முத்தமிட்டு விடைபெருமல் எகிப்லை விட்டுச் செல்ல நேரிட்டது என் மனதையே துணுக்குறச் செய்துவிட்டது. சில சமயங்களில் நான் தங்களுக்குக் கீழ்ப்படியாதிருந்தால் மன்னிக்க வேண்டுகிறேன் ஆனால் என் உள்ளபூர்வமாக உங்கள் மீது அன்பு செலுத்துகிறேனென்பது மட்டும் உங்களுக்கு நன்ருகத் தெரியும். மீண்டும் அந்த பழைய சம்பவங்கள் ஏற்படக் கூடாதென நான் ஆண்டவனிடம் பிரார்த்திக்கிறேன்.

'தனது குழந்தைகளுக்காக அவள் தன் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்கிறாள். மறுமணம் செய்து கொள்ளவோ மீண்டும் பொது வாழ்வில் ஈடுபடவோ அவளுக்கு [illegible] கொஞ்சமும் [illegible]

—"பாரத"

## ஆண் பெண் உறவைச் சித்தரிக்கும்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ருள்கள். ஆகையாற்ருன் இவற்றைச் சிறந்தனவென நம் முன்னோர் போற்றினர். அகத்திணைப் பாடல்கள் யாவும் இந்த உணர்ச்சிகளை அழகாகத் தீட்டிக் காட்டுகின்றன. உள்ளுறை உவமைப் பொருள், இறைச்சிப் பொருள் முதலியவற்றினாலும் பாட்டுக்களிலுள்ள பொருள்கள் சிறப்படைந்து அவற்றைக் கூறுவார் தம் உள்ளக் கருத்தைச் செவ்வி திற்புலப்படுத்துகின்றன.

### குரங்கின் கற்பு

தலைவன் தலைவியுடன் காதல் மணம் புரிந்து சுற்றத்தார் அறியாமல் வாழுகின்ருன் நள்ளிரவில் வந்து தலைவியைச் சந்திக்கிறான் பல கொடிய மிருகங்கள் நிறைந்த மலைச்சாரலவழியே, கரடுமுரடான பாதையிலே இராக் காலத்தில் வருவதால் தலைவனுக்குத் தீங்குவருமே என்று தோழி அஞ்சுகிறாள். தனது அச்சத்தை அழகாகப் புலப்படுத்துகிறாள்: "நாம் இன்பமாக இருக்க வேண்டுமாயின நீ இனி இப்படி இருட்டிலே வராதே" என்று வேண்டுகிறாள்.

"கருங்கட டாக்கலை
பெரும்பிறிதுற்றெனக்
கைம்மை உய்யாக்
காமர் மந்தி
கல்லா வன்பறழ்
கிளைமுதற சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப்
பாய்ந்து உயிர் செகுக்கும்
சாரல் நாடநடுநாள்
வாரல் வாழியோ
வருந்துதும் யாமே"

என்பது தோழி கூற்று. இது குறிஞ்சித் திணைப் பாடல் 'ஆண்குரங்குஇறந்துவிட்டது அதனைப் பிரிந்து தனிமையாக வாழ முடியாத பெண் குரங்கு தன் பச்சிளங் குட்டியை தன் சுற்றத்திடை சேர்க்கிறது. தன் துன்பங்களைப் போக்குவதற்காக உயர்ந்த மலையில் ஏறிப் பாய்ந்து உயிரை விட்டுவிடுகிறது. இத்தகைய மலையை உடைய தலைவனே நீ நடுச் சாமத்தில் வராதே நின் வருகை எமக்கு வருத்தத்தை உண்டுபண்ணுகிறது" என்று தோழி சொன்னாள். இவ்வளவும் மாத்திரம் அன்று. "உன் நிலத்திலுள்ள பெண் குரங்கு எவ்வளவு கற்பு உடையது என்பதை நீயே அறிவாய். ஆண் குரங்கு இறந்தவுடன் அதுவும் இறந்துவிடுகிறது. இதனை அறிந்த நீ இரவில் வரும்பொழுது உனக்கு இடையூறு ஏற்படின் என் தலைவியும் உடனே இறந்துவிடுவாள் என்பதைக் கூறவும்வேண்டுமா? என்பதையும் உணர வைக்கிறாள் குரங்கின் கதையினால் ஆகவே இப்படி இருவருடைய உயிர்க்கும் தீங்கு நேரிடாது வரைவில் மணஞ் செய்து [illegible] இலைனுமொருமுறை படித்துப் பாருங்கள்.

* *

இனி மனம் ஒன்றிய காதலரின் பேச்சொன்றைக் கேட்போம் ஒரு தலைவனும் தலைவியும் ஊழ்வயத்தால் ஒன்றுகூடி இன்புறுகின்றனர் அன்புடைய நெஞ்சம் இரண்டும் ஒன்றையொன்று கலந்து ஒரு தன்மையாய் இருக்கின்றன. செம்மண் நிலத்திற் பெய்த மழை நீர் எப்படி அந்நிலத்தின் இயல்பை அடைகின்றதோ அதுபோலவே இருவரும் கலந்தனர். இப்படி இயற்கையாக ஏற்பட்ட கலப்புக்கு இடையூறு வருமோ? ... வன் தன்னை விட்டுப் பிரிந்து செல்வானோ என்று தலைவியின் உள்ளத்தில் பல எண்ணங்கள் தோன்றின. அவற்றை அறிந்த தலைவன் எவ்வளவு அழகாகப் பேசுகிருன் பாருங்கள்.

"யாயும் ஞாயும்
யாராகியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி
அறிதும்
செம்புலம் பெயல்
நீர்போல
அன்புடை நெஞ்சந்
தாங்கலந்தனவே"

அன்புடை நெஞ்சம் தாமாகவே கலந்தன இது நம் செயலால் அல்லது பிறர் செயலால் ஏற்படவில்லை. ஆதலின் பிரிவு ஏற்படுமா? ஏன் வருந்துகிருய் என்று தலைவியைத் தேற்றுகிருன்

### அன்பு வாழ்க்கை

நமது முன்னோர் அன்பு வாழ்க்கையிலேயே இன்பம் அடைந்தவர்கள். ஆண் பெண் உறவின் அடிப்படை அன்பே. இந்த அன்பினால் தம் நாயகருடைய துயரைத் தம் துயராகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நம் தமிழ் நாட்டுப் பெண்மணிகள். "நும்மொடு துன்பம் துணையா நாடின் அதுவல்லது இன்பமுண்டோ எமக்கு' என்பதும் ஒரு பெண்ணின் கருத்து. தலைவியர்களை எவ்வகையாலும் துன்பமடையவிடாது காத்து வந்தார்கள் தலைவர்கள் ஒருவரை ஒருவர் பேணி, அன்பாக வாழும் வாழ்விலே உயர்ந்து விளங்கினவர்கள் தமிழர்களாகையால், சிறந்த நாகரீகம் படைத்த மக்களிடை இருக்க வேண்டிய உயரிய பண்புகளைத் தமிழ்நாட்டு விலங்குகளிடத்துங்கூடி அவர்கள் புகுத்திப் பல காட்சிகளைச் சித்தரித்துள்ளர். தொடக்கத்திலே ஒரு பெண் குரங்கின் கதையை அறிந்தோம் இனி ஆண் யானை ஒன்றின் கதையைக்கேளுங்கள். வெப்பம் நிரம்பிய கொடிய காட்டிலே தண்ணீர் தேடிச் சென்ற ஆண் யானையும், அதன் பிடியும் ஒரு சிறு நீர் நிலையைக் கண்டன. அந்த ஆண் யானை முதலிற் பெண் யானையை ஊட்டி அதன் பின்னரே தான் உண்டது. இந்தச் சிறந்த செய்தியைப் பாலைக் கலி கூறுகிறது.

### மானின் காதல்

இதனினும்சிறந்தசெய்தி ஒன்றை ஐந்திணை ஐம்பதிலுள்ள செய்யுள் ஒன்று கூறுகின்றது. வாழ்க்கையோ ஒரு பாலைவனம். இதிலே ஆண்—பெண் தொடர்பினலேயே உண்மையான இன்பம் உண்டாகும். வாழ்விலே கிடைக்கும் பொருளை இருவரும் சேர்ந்து நுகரவேண்டும். ஒருவரை விட்டு ஒருவர் இன்புற முயல்வது உண்மை அன்பின் அடையாளமாகாது. ஒருவர் மற்றவருக்காகவே வாழுகின்ற உயர்ந்த பண்பாடு ஏற்பட்டால் வையகம் வானகமாக மாறி மட்டில்லா இன்பத்தை நல்கும் இன்ப துன்பம் என்று நாம் கருதுவன யாவும் மன நிலையைப் பொறுத்தனவே. தனக்காக வாழுகின்ருன தன் நாயகன் என்பதை அறியும் பொழுது ஒரு நாயகியும், தனக்காக வாழுகிருள் தன் தலைவி என்பதை அறியும் பொழுது ஒரு நாயகனும் அடையும் இன்பத்தை அளவிட முடியாது.

"நோதலெவன் மற்று நொந்தாரென்றறியுங் காதலரில்லா வழி" என்று வள்ளுவர் கூறியதை நாம் உன்னிப் பார்க்கவேண்டும். ஒருவருக்காக மற்றவர் தியாகம் செய்யும் அன்பு நிலைதான் உண்மைக் காதல் வாழ்வின் உச்ச நிலை. இந்த நிலையைத் தமிழ் நாட்டு மான்களிடம்வைத்துக்காட்டுகின்ருர் மாறன் பொறையன் என்னும் புலவர் பெருமான்

தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டான். தலைவனது பிரிவைத் தாங்கமாட்டாது வருந்துகிருள் தலைவி. தோழி அவளைத் தேற்றுகிருள். உன்னுடைய காதலர் சென்ற வழியிலே அவரைத் தெருட்டி உன்னிடம் விரைவில் அனுப்பும் காட்சிகள் பலவுள தன் பெண் மானுக்குக் குடிக்க நீர் போதாதென்று கருதிய கலைமான் தான் குடிப்பது போலக் கள்ளஞ் செய்து நீர் முழுவதையும் அதுவே குடிக்கச் செய்யும் காட்சியை அவர் கண்டால் உன்னை நினைந்து அவர் உடனே வருவார்' என்று கூறுகிருள்

'சுனைவாய்ச் சிறுநீரை
எய்தாது என்று
எண்ணிப்
பிணைமான் இனிதுண்ண
வேண்டிக்—
கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும்
சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி"

இவ்வாறு அரிய கருத்துக்களை அள்ளிச் சொரிவன நமது அகத்திணைப் பாடல்கள். அவற்றைப் படித்து இன்புறுவது நமது கடன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரஞ்சிதம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கங்களில் கள்ளக் கணக்கெழுதி வைத்திருப்பதையும் சமரவீரா உயிரோடிருந்தால் துரைக்கு ஆபத்து வருமென்றும் சொல்வான். இப்படியே அவன் நாளும் பொழுதும் சாடைமாடையாக கூறிய விஷயங்கள் எதிர்பார்த்த பலனையளித்தன. தனது கணவனை துரைதான் கொன்றிருக்க வேண்டுமென்ற சந்தேகம் பிரேமாவின் உள்ளத்தில் பதிந்துவிட்டது.

சிவபாலன் ஒருநாள் துரையின் கட்டளையின் பேரில் பிரேமாவதி வீட்டுக்குப் போனபோது அன்று சமரவீரா செத்துக் கிடந்த பள்ளத்தாக்குக்கு மீனாட்சியை அழைத்துக்கொண்டு சென்றபொழுது கண்டெடுத்த அந்தப் பிறை வடிவமான பொருளையும் கொண்டுபோனான். அதில் பொன்னும் மணியும் காணப்பட்டதால் கண்டியிலுள்ள கடைகளில் விற்றுப்போட்டு மீனாட்சிக்கு ஏதாவது ஒரு பரிசுப் பொருள் வாங்க வேண்டுமென்ற ஆசையினாலேயே அதை எடுத்துச் சென்றான். அவன் பிரேமாவதியிடம் அதைக் காட்டவில்லை. ஒருவேளை அவள் அதைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டாள் என்ன செய்வதென்று பயந்து பத்திரமாக மறைத்து வைத்துக்கொண்டான்.

பிரேமாவதி வீட்டுக்குச் சென்று தான் வந்த காரியத்தை முடித்துக்கொண்டு கடைத் தெருவுக்குச் சென்றான் சிவபாலன். நகைக் கடைகள் வரிசையாக இருந்தன. ஆனால் அவனுக்கு அந்தக் கடை எதற்குள்ளும் நுழைவதற்குத் துணிச்சல் வரவில்லை. ஒருவேளை தன் கையிலிருக்கும் பொருள் பித்தளையாலும் கண்ணாடித் துண்டுகளாலும் செய்யப்பட்ட பொருளாயிருந்தால் அல்லது அது உண்மையாகவே பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்டதாக இருந்து கடைக்காரர் அதைக் களவுப் பொருள் என்று சந்தேகித்துவிட்டால் என்று நினைத்தபொழுது பேசாமல் திரும்பிப்போய்விடலாமா என்றெண்ணினான் சிவபாலன்.

அவன் இப்படி செய்வதின்னதென்று தெரியாமல் கடைத் தெருவில் இங்குமங்குமாக திரிந்துகொண்டிருக்கையில் முன்பின் பழக்கமிலலாத ஒரு ஆசாமி அவனுடைய தோளில் தட்டி "தம்பி! எப்படி சௌக்கியமா?" என்று கேட்டார். திரும்பிப் பார்த்த சிவபாலனுக்கு அந்த ஆசாமி யார் என்பதே புரியவில்லை. அசல் சிங்களவர்போல் உடை உடுத்தியிருந்தார். கருகருவென்று வளர்ந்த தாடி அவருடைய முகத்தை அலங்கரித்தது. ஆசாமி அங்கொடையிலிருந்து தப்பி வந்திருக்கிறாரோ அல்லது ஆள்மாறாட்டமாக தன்னை மறித்து சேமலாபங்கள் கேட்கிறாரோ அல்லது நவீன பிச்சைக்காரர் இனத்தைச் சேர்ந்தவராக இருப்பாரோ



கடைத் தெருவில் இங்குமங்குமாக திரிந்துகொண்டிருக்கையில் முன்பின் பழக்கமில்லாத ஒரு ஆசாமி அவனுடைய தோளில் தட்டி "தப்பி! எப்படி சௌக்கியமா?" என்று கேட்டார். திரும்பிப் பார்த்த சிவபாலனுக்கு அந்த ஆசாமி யார் என்பதே புரியவில்லை.

என்றெல்லாம் சிவபாலன் எண்ணிக்கொண்டிருக்கையில் அந்தத் தாடி ஆசாமி "என்ன மிஸ்டர் சிவபாலன்? என்னைத் தெரியவில்லையா? இந்த தாடி வைத்துக்கொண்ட பின்னர் எல்லோருக்கும்தான் என்னைத் தெரியாமல் போய்விட்டது போகட்டும். நீர் கிறீன் எஸ்டேட்டில்தான் இன்னமும் இருக்கிறீரா. இரண்டு வருடங்களுக்குமுன் நான் அந்தப் பக்கம் வந்தபொழுது நீர் அங்கு சின்னக் கிளாக்கு உத்தியோகத்திலிருந்தீரல்லவா?..............." என்று அடுக்கிக்கொண்டு போனார்.

இதைக் கேட்டதும் அந்த ஆசாமி பைத்தியக்காரனுமல்ல, நவீன பிச்சைக்காரனுமல்ல என்று சிவபாலன் முடிவு செய்துகொண்டு "இப்பொழுது நான் மல்லிகைத் தோட்டத்தில் கிளாக்காக இருக்கிறேன் உங்களைத் தெரியவில்லையே...... ......" என்று இழுத்தான்.

"தெரியாவிட்டால் பரவாயில்லை, அதிருக்க, மல்லிகைத் தோட்டத்தில் சமரவீரா என்றொருவர் கிளாக்கராக இருந்தாரே"

"அவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இறந்து போனார்"

"இறந்து போனாரா? ஐயோ பாவம் அவருடைய சம்சாரம்?"

"அவள் இப்போ அதோ தெரிகிறதே அந்த வாகை மரம். அதற்கு எதிர்த்தாப்போலே இருக்கிற பங்களாவில் குடியிருக்கிறா?"

"சந்தோஷம். நீர் இப்போ எங்கே போகிறீர்"

"ஒரு இடமுமில்லை. சும்மா இப்படி கடைத்தெருவை சுத்திப்பார்க்கலாமென்று கிளம்பினேன்"

"காரியமில்லாமல் சும்மா வருவீரா? அதென்ன மடியிலே ஏதோ கனமாயிருக்கே?"

சிவபாலனின் கண்களில் பீதி பிரதிபலித்தது. அதைக் கண்ட அந்த தாடிவாலா "தம்பி சிவபாலன்! பயப்பட வேண்டியதில்லை. விஷயத்தை ஒளியாமல் சொல்லும். நான் உமக்கு வேண்டிய உதவி செய்கிறேன்" என்றார். அப்பவும் சிவபாலனுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. ஆசாமி திருட்டுப் பேர்வழியாயிருக்குமோ என்றெண்ணினான் சிவபாலன்

சிவபாலன் தயங்குவதைக் கண்ட அந்த தாடிக்காரர் "தம்பி கிறீன் எஸ்டேட் மாரிமுத்துக் கங்காணியைக் கேட்டுப்பாரும் என்னைப் பற்றி அவருடைய மகன் சுந்தரத்துக்குத் தெரியும் என்னை பாவம் அந்தப் பையன் இந்தியாவில் ரயில் விபத்தில செத்துப் போனான்........."

இதைக் கேட்டதும் சிவபாலனுக்கு கொஞ்சம் தைரியம் பிறந்தது ஆசாமி அப்படிக்கெட்டவனாக இருக்க மாட்டான் என்ற நம்பிக்கையுண்டாயிற்று. மடியில் மறைத்து வைத்திருந்த பொருளை எடுத்து தாடிக்காரரிடம் கொடுத்தான் தாடிக்காரர் அதைப் பார்த்துவிட்டு "தம்பி! இது கொஞ்சம் விலைமதிப்புள்ள பொருள். இதை நகைக் கடையில் விற்கக்கொண்டு போனால் வீண் சந்தேகத்துக்கிலக்காகி கஷ்டப்பட வேண்டிவரும். இது உமக்கு எப்படிக் கிடைத்தது"

"தோட்டத்தில் தேயிலைப் புதருக்குள்ளிருந்து ஒரு நாள் கண்டெடுத்தேன்"

"அப்படியா? தோட்டத்தில் என்றால் எந்த இடத்திலென்று சொல்ல முடியுமா?"

"பூமலைப் பீடபூமிக்குக் கீழேயுள்ள பள்ளத்தாக்கில்"

"[illegible] இது என்னிடம் இருக்கட்டும். இப்பொழுது உமக்கு பணம் வேண்டுமானால் நூறு அல்லது இருநூறு ரூபாய் பெற்றுக்கொள்ளும். நான் இதை ஒரு பத்தரிடம் காட்டி விலை மதிப்பித்து பாக்கிப் பணத்தை உமது விலாசத்துக்கு தோட்டத்துக்கு அனுப்பி வைக்கிறேன். சம்மதந்தானே?"

சிவபாலன் சம்மதம் என்பதற்கு அறிகுறியாக தலையை ஆட்டினான். இந்த விநோத மனிதனின் போக்கு பெரும் புதிராக இருக்கின்றதென்று அவன் மனதுக்குள் எண்ணினான்.

யாரிடத்திலாவது அவமானமடையாமலும் திருட்டுப் பட்டம் வாங்காமலும் இருநூறு ரூபாய் கைக்கு வந்துவிட்டதே என்றெண்ணி மகிழ்ந்தவனாக மீனாட்சிக்கு என்ன வாங்குவதென்ற சிந்தனையில் மூழ்கி தெருவோடுபோனான்.




## சினிமா பட உற்பத்திக்கான புள்ளி விபரங்கள்

இந்திய படத் தொழில் உற்பத்திக்கான பொருளாதார புள்ளி விபரம் கீழே தரப்படுகிறது. சராசரி ஒரு ஆண்டில் படப் பிடிப்புகளுக்காக ஒதுக்கப்படும் முதலீடு, பட வெளியீடுகள், உற்பத்தியாளர், விநியோகஸ்தர், திரையிடுவோர் எண்ணிக்கை, ஸ்டுடியோக்கள், சினிமாக்கள், படம் பார்ப்போர், படத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் முதலியவற்றின் விவரங்கள் அகில இந்திய ரீதியில் அடங்கியுள்ளன.

A முதலீடு:

1 படத் தொழிலுக்காக ஒரு ஆண்டில் செலவாகும் உத்தேசத் தொகை ரூ 42 கோடி

2 ஸ்டுடியோ சிற்பசாலை (லெபாரடரி) ஆடை, ஆபரண அலங்காரம் ரூ 6 கோடி

3 உற்பத்திக்கும், விநியோகிப்பிற்கும் ஏற்படும் செலவு ரூ 10 கோடி.

B பட வெளியீடுகள்-உற்பத்தி-விநியோகம்;

1 சராசரி வருஷ வெளியீடுகள் 250 படங்கள்

2 ஸ்டுடியோக்கள் 60

3 லெபாரடரிக்கள் (சிற்பசாலைகள்) 40

4 ஒலி அரங்குகள் (சௌண்ட் ஸ்டேஜ்) 140

5 படப்பிடிப்பிற்கான பரப்பு 5500 சதுர அடி

6 சராசரி பட உற்பத்தியாளர்கள் 300

7 சராசரி விநியோகஸ்தர்கள் 600

C காட்சிசாலைகள்;

1 நிரந்தர சினிமாக்கள் 34,200

2 தற்காலிக அல்லது டூரிங் சினிமாக்கள் 800

3 சினிமா உள்ள ஊர்கள் 1609

4 சராசரி ஒரு நாளில் சினிமா பார்ப்பவர்கள் 20,60,000

D சிப்பந்திகள்

1 பட உற்பத்திக்காக அமர்த்தப்படுவோர் 25 000

2 விநியோக சிப்பந்திகள் 7,000

3 காட்சிக்கூடப் பணியாளர்கள் 50,000

4 கூட்டுறவு வேலையிலீடுபடுவோர் 8,000

E படத்தின் பண மதிப்பீடு வரவு வரி:

1 ஒரு சாதாரண படப்பிற்கான சராசரி செலவு ரூ 4 முதல் 5 லட்சம்

2 தமாஷா வரி உட்பட, படங்கள்மூலமாக சராசரி வசூல் ரூ 25 கோடி

3 தமாஷா வரி ரூ 6 கோடி

4 இதர வரிகள் ரூ 6 கோடி

5 ஒரு படப்பிடிப்பிற்கான சராசரி காலம் 6 முதல் 12 மாதங்கள்.

F பட நீளம்;

1 பம்பாய், கல்கத்தா படங்கள் 12 000 அடி

2 சென்னை படம் (சராசரி) 15 000 அடி

G படம் சம்பந்தமான இறக்குமதி:

1 இறக்குமதியாகும் சராசரி வருஷ கச்சா பிலிம்ஸ் 20 கோடி அடி

2 டிபிலிம் சுருளுக்கான விலை ரூ $1\frac{1}{2}$ கோடி

3 ஒலி ஒளி மற்றும் இதர சாதனங்கள் ரூ 20 லட்சம்

4 புரோஜக்ஷன் சாமான்கள் இறக்குமதி ரூ 60 லட்சம்.

### சினிமாச் செய்திகள்

பம்பாயில் நடிகர் ஓம்பிரகாஷ் டைரெக்ஷனில் 'ரேஷன்கார்டு' என்ற இந்திப் படம் தயாரிக்கப்படவிருக்கிறது

* * *

'ஹாம்லெட்' கதையை தழுவி நடிகர்—படத்தயாரிப்பாளர் கிஷோர்சாஹூ தயாரிக்கப்போகும் இந்தி படத்தில் பாடல்களே இருக்காது.

* * *

நடிகர் ராஜ்கபூர் தமது 'அஜந்தா' கலர் படத்திற்காக பிரபல ஹாலிவுட் 'மேக்கப்மேன்' பட்வெஸ்ட்மோர்—ஐ அழைத்திருக்கிறார்.

* * *

பம்பாயில் ஜெயந்த் தேசாய் டைரெக்ஷனில் உருவாகிவரும் 'ஹாஸர் ரட்டன்' (தமிழில் ஆயிரம் விளக்கு) கிட்டத்தட்ட பூர்த்தியாகிவிட்டது. ரெஹ்னா, ஆகா முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

* * *

குணசித்ர நடிகர் நாகையா தயாரித்து வரும் 'என் வீடு' படத்தில் அம்புஜா என்ற புது நடிகை 'முகப் பிரவேசம்' செய்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தஹேன தோட்டத் தொழிலாளர் தகராறு

## விசாரணையில் கலந்துகொள்ள தோட்ட நிர்வாகிகள் மறுப்பு

நமுனு கொல்லையைச் சேர்ந்த கந்தஹேனத் தோட்டத் தொழிலாளர் தகராறு இப்பொழுது புதிய கட்டத்தை அடைந்திருக்கிறது. இதை விசாரணை செய்யும் பொருட்டு இரண்டாவது முறையாக, விசாரணை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட திரு டி. எச். கிரீவ் தனது விசாரணையைத் தொடங்கி விட்டார்

முதல் நாள் விசாரணை இம்மாதம் 13ந் தேதி பதுளை நகர மண்டபத்தில் ஆரம்பமாயிற்று ஆனால் தோட்ட நிர்வாகத்தின் சார்பாக பிரதிநிதியோ, வழக்கறிஞர்களோ ஆஜராகவில்லை, பிரஸ்தாப விசாரணை அதிகாரியின் நியமனமே செல்லாதென்றும், சட்ட ஆலோசகர்களின் ஆலோசனைக்கிணங்க தாங்கள் இவ்விசாரணையில் கலந்து கொள்ள முடியாதென்றும் தோட்ட நிர்வாகிகள் தெரிவித்தனர்

அவர்களுக்கு "சமன்" அனுப்புமாறு தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக ஆஜரான வழக்கறிஞர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தோட்டத்துரை பயர்ஸ், பெருமாள் கணக்கப்பிள்ளை, நாராயணசாமி உதவிக் கணக்கப்பிள்ளை ஆகியோருக்கு 14ந் தேதி விசாரணையின்போது ஆஜராகும்படி விசாரணை அதிகாரி 'சமன்' அனுப்பினார் ஆனால் அன்றும் அவர்கள் ஆஜராகவில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெற்றது. தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு எஸ் எம் சுப்பையா சாட்சியமளித்தார். பின்னர் விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கந்தஹேனத் தோட்டத்தில் 61 தொழிலாளர்களை நீக்கியது சம்பந்தமாகவே இத்தகராறு ஏற்பட்டிருக்கிறது.

விசாரணையின்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக திருவாளர்கள் எஸ். பி. அமரசிங்கம், எஸ். கனகரத்னம் ஆகிய வழக்கறிஞர்கள் ஆஜராகி வாதித்தார்கள்.

விசாரணையில் கலந்து கொள்ள மறுத்ததற்காக தோட்ட நிர்வாகிகள் மீது தொழிலாளர் இலாகா சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தெரிகிறது

### வளையல் போடாதே

எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த அல்கொல்லைத் தோட்டத்தில் இலங்கையில் எங்குமே கேள்விப்பட்டிராத ஒரு நூதன முறையை அத்தோட்டத் துரை வற்புறுத்துவதாகத் தெரிகிறது.

தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண் தொழிலாளர்கள் தங்கள் கைகளில் வளையல் அணியக் கூடாதென்று உத்தரவிட்டிருக்கின்றார். இதற்கு அவர் கூறும் காரணம் மிக விசித்திரமானது. தேயிலைக் கொழுந்து பறிக்கும்போது பெண் தொழிலாளர் தங்கள் கைகளில் வளையல் அணிந்திருந்தால் அவைகள் உடைந்து தேயிலைக் கொழுந்துடன் கலந்து விடுமாம். தேயிலைக் கொழுந்திலோ, அல்லது பாகம் செய்யப்பட்ட தேயிலையிலோ வளையல் துண்டுகள் சம்பந்தமாக இதுவரை எவ்வித புகார்களும் கிடைத்ததில்லை என்று விசாரித்ததிலிருந்து தெரிய வருகிறது.

தோட்டத் துரையின் இந்த தடபுடல் தர்பார் மீது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூடனே நடவடிக்கை எடுத்துக்கொண்டது. இத்தகராறை விசாரிப்பதற்கு இம்மாதம் 25ம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் தோட்ட நிர்வாகத்துக்குமிடையே ஒரு மகாநாடு நடைபெறுமென அறியப்படுகிறது.

### சாராயம் விற்றதாக குற்றச்சாட்டு

வாரக்காவைச் சேர்ந்த "... கிராப்ட்" தோட்டத்தைச் சேர்ந்த வேலு என்னும் தொழிலாளியின் மனைவி மாரியாயி என்பவர் தோட்டத்து உபாத்தியாயர், உதவி கிளார்க்கர் தோட்டத்துக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்யும் இராமகிருஷ்ணன் என்னும் வியாபாரிக்கும் சாராயம் விற்பனை செய்ததாக குற்றஞ் சாட்டி தோட்டம்விட்டு வெளியேறும்படி உடன் பற்றுச்சீட்டு கொடுத்ததை ஆட்சேபித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்ததன் பேரில் தொழிலாளர் காங்கிரசுக்கும் தோட்டத்துரைக்குமிடையே ஒரு சமரஸ முடிவுக்கு வரமுடியாது போகவே தொழில் தகராறு கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் விசாரணை கடந்த 10-ம் திகதி நடைபெற்றது. விசாரணை முற்றுப்பெறாததால் இம்மாதம் 24-ம திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.




### காந்திஜி படம் நொருக்கிய அக்கிரமம்

இரத்தினபுரியைச் சேர்ந்த மில்லவிட்டிய தோட்டத்தில் பல காலம் தோட்டக் கமிட்டி இல்லாதிருந்தது. தொழிலாளர்களின் இடைவிடாத போராட்டத்தின் விளைவாக தோட்டக் கமிட்டி உதயமாயிற்று.

தோட்டக் கமிட்டிக்கும் தோட்ட நிர்வாகத்துக்குமிடையே ஏற்பட்ட சிறு சிறு தகராறுகளை அடிப்படையாகக் கொண்டு கமிட்டி முக்கியஸ்தர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டதோடு காந்தியடிகளின் உருவப் படத்தையும் உடைத்து விட்டதாக தொழிலாளர்கள் செய்த முறைப்பாட்டின்மீது நடத்துவதாக இருந்த விசாரணை எதிர் வரும் டிசம்பர் 4-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.


# முருகன் தியேட்டர் (ஜிந்துப்பிட்டி)

## சலனப்பட சரித்திரத்தில் ஓர் புதுமைச் சித்திரம்



சனி, ஞாயிறு பிற்பகல் 3 மணி, மாலை 6 மணி
இரவு 9-30 மணி-ஞாயிறு காலை 10 மணிக்கு விசேஷ காட்சி.
தினசரி மாலை 6-30 மணி இரவு 9-30 மணி

- டப்பறியாப் பாலனுக— தொல்லை தரும் பிள்ளையாக விளங்கினான் அமர். தந்தையின் பகைசாதலையும் அந்த வீடு போகதலையும் ...
- குப்டோடன சிங்காரி. பயிலிடக்காரி. ஓயில் நடை அழகி. கண்வலை வீசினாள். காதற்கலையூட்டினாள்
- ஆனால் அந்தப் பணத்தை—அதன் ஒப்பற்ற சுவையை உணர்ந்தானில்லை அவன். பிறகு............?

## வெள்ளித் திரையே சாக்ஷி

நஸீர்கான்-ஷியாமா-அன்வார்
அச்சலா-ஷியாம் லால்-லலிதாபவர்
முதலியோர் நடித்த

## ஹிந்திக் கதைதான்......

# ஆஸ்மான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ரூசோ

அகவிருள் சூழ்ந்திருந்த அன்றைய மனித சமுதாயத்தின் சுடரொளி வீசும் திருவிளக்காகக் காணப்பட்டார் ரூசோ. இவர் ஓயாத புயலுக்கும், ஒழியாத வறுமைக்கும், தீராத தரித்திரத்திற்கும் மத்தியில் தன் வாழ்க்கையென்னும் ஓடத்தை புரட்சி, புதுமை என்ற தண்டுகளால் தொடுத்துக்கொண்டு அந்த அழம் நிறம்பிய கடலிலே மிதந்து கொண்டிருந்தார் ஆனால் ரூசோ தன் வாழ்க்கை ஓடத்தை தனக்காக அல்லது தன் இனத்தினருக்காக அல்லது தன் மதத்தினருக்காக செலுத்திக் கொண்டிருந்தாரில்லை. உலக மக்கள் உயர்வும் நலனும் நிறைந்த வாழ்வு வாழவேண்டுமென்ற ஓர் உயரிய கொள்கைக்காகவே தன் ஓடத்தை செலுத்திக் கொண்டிருந்தார் மணிமுடி தரித்தாளும் மன்னர்களும் இன்பத்தொழிலாளர்களை தங்களது தளிர்ப்பிற்காக பயன்படுத்திக் கொண்டு இன்பபுரியில் சல்லாபித்துச் சஞ்சரிக்கும் சிறுமதிகொண்ட ஊதாரிப் பிரபுக்களும் மக்களை அடிமையென்னும் இரும்பு விலங்கால் அசைய முடியாதபடி பூட்டி விட்டு எதேச்சதிகாரம் செலுத்தி வந்த சமயத்தில் அவற்றுக்குச் சாவுமணி அடிக்கத் தன்னையும் தன் நேரத்தையும் தன் சக்திகளையும் தத்தம் செய்தார் இந்தத் தன்னுணர்வாளர். அன்னார் காட்டிச்சென்ற தத்துவங்கள் இன்றும் புதுமையுடனும் புகழுடனும் நிலைத்து வாழ்ந்து வருகிறது. 1712ம் வருடம் உதித்து மங்கா அருஞ்ஜோதியாய் மக்கள் மத்தியில் நின்றுலவி வந்த ரூசோ என்னும் அறிவுப் பகலவன் இறுதியாக 1778ம் வருடம் மறைந்து விட்டது. ஆனால் அந்தப் பகலவனின் பிரகாசத்தில் மக்கள் கண்ட தத்துவங்களில் ஒன்றேனும் இன்றும் மறைந்து விடவில்லை.

தா. சின்னவெல்வை
அரசடி மிசன் பாடசாலை
மட்டக்களப்பு

---

காமன் வெல்த் நாடுகளிலிருந்து தாதித் தொழில் கற்றுக் கொள்வதற்காக பிரிட்டனுக்கு வந்திருக்கும் மாணவிகளுக்கு லண்டனில் ஒரு ஆஸ்பத்திரியில் பயிற்சி அளிக்கப்படுகிறது.



## புத்தகம் நம் நண்பன்

நம் வாழ்க்கைக்கு வழி காட்ட, நன்மை செய்ய நண்பர்கள் எவ்வளவு அவசியமோ? அதுபோன்று அறிவிலே, ஆராய்ச்சியிலே, முன்னேறுவதற்கு புத்தகங்கள் அவசியம். நல்லவர்களாய் வாழ்வ[illegible] நல்ல நண்பர்களோடு பழகி [illegible] விஷயங்களிலே பங்குபற்றுவதுபோன்ற நல்ல புத்தகங்களை வாசித்து அறிவைப் பெருக்கி அறிவாளிகளாய் ஆகுவதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும் நாம் வழி தவறி நடக்கும்போது உண்மைத் தோழர்கள் நல்ல புத்திமதிகளை சொல்லி வழி காட்டுவதுபோல் நல்ல ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள் எழுதிய புத்தகங்கள் நம்மை நல்வழிக்கு இழுத்துச் செல்லும் அவைகளை நாம் படிக்கத் தவறிவிடக்கூடாது. அவைகளில் நம்சிந்தனையை செலுத்தி நேரத்தை வீணாக்குவது சிநேகிதர்களோடு சேர்ந்து வீணில் தெரு சுற்றுவதுபோலாகும் நல்ல புத்தகங்களைக் கையில் ஏந்திக்கொண்டு பார்ப்பவர் கண்களுக்கு பகட்டாக நடந்தால் மட்டும் அறிவின் வளர்ச்சியும் வாழ்க்கையில் முன்னேற்றமும் அடைந்துவிட முடியாது. நமது நன்மை தின்மைகளைப் பற்றி நம் நண்பர்களுடன் உரையாடி யோசனைகளைக் கேட்கின்றோமே? அதுபோன்று நாம் படிக்கும் புத்தகங்களில் உள்ள கருத்துகளை தெரிந்தவர்களிடம் கேட்டு உணர்ந்து அவர்கள் சொல்லுவது சரியா பிழையா என்று சிந்தித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். சரித்திரம் விஞ்ஞானம், இலக்கியம், கலை, இயல், இசை, நாடகம், சம்பந்தமான புத்தகங்களை நாம் படித்து முன்னேற்றம் அடைவதற்கு, பள்ளிக்கூட மாணவர்களாகிய நாம் ஊக்கம் காட்ட வேண்டும்.

"இளஒளி"
மத்தியக் கல்லூரி
கொழும்பு

## பொறாமை

ஒருவனது கல்விச் செல்வத்தையோ. பொருள் செல்வத்தையோ கண்டு மனம் சகிக்காமலிருப்பதைப் பொறாமை என்று சொல்லப்படும்--பொறாமையுடையோனது உள்ளம் எந்நாளும் எரிந்தவண்ணமேயிருக்கும் பொறாமையுடையோனுக்கு எங்கும் பகையுண்டு பொறாமையுடையோன் தானே தனக்குத் துன்பத்தைத் தேடிக் கொள்கின்றான்.

ஓர் ஊரிலே ஓர் வணிகனிருந்தான் அவன் ஒரு தடாகக் கரையிலிருந்து கொண்டு காளி தேவியைத் தவம் செய்தான். அதைக் கண்ட அவ்வணிகனது பகைவனான இன்னொரு வணிகன் இவன் மிக்க திரவியத்தை வேண்டி தவம் செய்தான். நான் அவனைப் பார்க்கிலும் இருமடங்கு காளி தேவியைத் தவம்புரிதல் வேண்டும் எனச் சிந்தித்து அத்தடாகத்தின் மற்றக்கரையிலிருந்துகொண்டு தவம் செய்தான் அப்பொழுது காளிதேவி வந்து உனக்கு யாது வரம் வேண்டுமென முந்திய வணிகனிடம் கேட்க எனது கண்களில் ஒன்று குருடாகவேண்டுமெனக் கேட்டான் மற்ற வணிகனிடம் சென்று உனக்கு யாது வரம் வேண்டுமென்று கேட்டாள். எனக்கு எம்மாற்றான் பெற்ற வரத்தைப் பார்க்கிலும் இருமடங்கு வேண்டுமெனக் கேட்டான். அதற்கு காளிதேவி "அவன் தனொரு கண் கெட வேண்டுமெனக் கேட்டான், ஈந்தேன்; நீ அவனுக்கு உதவிய வரத்தைப்பார்க்கிலும் இருமடங்கு வேண்டி நின்றாய், ஆதலின், உன்னிரு கண்ணும் கெடக்கடவை" என மறைந்தனள். ஆகையால் நாங்கள் இன்னொருவரைப் பற்றிப் பொறாமையடையக்கூடாது.

எம். எஸ். எம் மெக்கி
கனிஷ்ட பாடசாலை
ஏறாவூர், செங்கலடி

## தன்மானம்

"அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் வராகன் கொடுத்தாலும் வராது" தமிழகத்தின் நாடோடிப் பழமொழிகளில் இதுஒன்று. "மானத்தை மரக்கலம் ஏற்றாதே" நம் நாட்டில் அன்றாடம் நடைபெறும் உரையாடல்களில் அடிக்கடி வந்துபோகும் சில வார்த்தைகள். "மானமெல்லாம் போன பின்னே வாழ்வதுதான் ஒரு வாழ்வா" உறங்கிக் கிடக்கும் நம்மினத்தை உடனடியாகத் தட்டியெழுப்பவேண்டி பேச்சு மேடைகளில் பேச்சாளர்கள் கொட்டும் புரட்சி முரசு மரணமே வரினும் மானமே பெரிதென மதித்த மறக்குடி மகளிர்களின வம்சத்தில் பிறந்தவர்கள் நாம். புதிய உலகம் காண வேண்டி பொங்கியெழும் பூவையர்கள் எழுப்பும் புரட்சிக் குரலில் சிறு பகுதி தன்மான உணர்ச்சி நம் நாட்டிலும் ஏட்டிலும் பரவி நிற்கும் ஓர் அனிய வார்த்தை. வாழ்க்கையில் வளம்பல பெறுவதற்கு, முன்னேறுவதற்கு, இனிமையைக்காண்பதற்கு தன்மான உணர்ச்சி இன்றியமையாதது தன்மான உணர்ச்சி உரிமைக்கு உறுதியளிப்பது, முயற்சிக்கு நம்பிக்கை ஊட்டுவது, வாழப் பிறந்தவர்களின் பிறப்புரிமைதான் தன்மான உணர்ச்சி நாடு, இனம், மொழி, கலாச்சாரம் இவைகள் மாளாது நிலைத்து நிற்பதற்கு வேண்டிய உடனடித் தேவைகளில் இந்த உணர்ச்சி முதலிடம் பெறுகின்றது. இந்த உணர்ச்சியை மற்றவர்கள் நமக்கு அளிக்க முடியாது இது நம்முடன் பிறந்து வளரவேண்டும் இதுநிலைத்துநின்றால்தான் நாமமகிழ்ச்சியுடன் வாழ முடியும்.

இன்றைய மாணவர்கள் தாம் இந்த நாட்டின் வருங்கால மன்னர்கள். நம்மினத்தின் வாழ்வும், தாழ்வும் எங்கள் கரங்களில் தங்கியிருக்கிறது. தமிழினம்புது வாழ்வு காண-தமிழ் மொழி தனைதமே தாங்க—தாழ்ந்த தமிழகம் மீண்டும் வாழ்வு பெற—இழந்த உரிமையை மீண்டுமடைய தன்மான உணர்ச்சி அவசியம் தேவை "தன்மானமொன்றே நல் வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த என் மறவேந்தர்—பூனைகளல்லர் புலி நிகர் தமிழ் மாந்தர்" புரட்சிக் கவிஞரின் இன்பகீதம் எமது இதயகீதமாகமாறட்டும்—மாற்றப்படவேண்டும்.

செல்வி டி. அரியமலர்
சென் மேரிஸ் கல்லூரி
திரிகோணமலை

## தந்தையைத் திருத்திய தனயன்

அம்மா! அப்பாவைக் காணவில்லையே? "எங்கே போகிறது கள்ளுக்குத் தான்" என்றாள் அன்னை அப்போதுதான் ஆடி ஆடி வந்தார் ஆனந்தனின் தந்தை சுப்பு

அப்பா! நீங்கள் குடியை விடமாட்டீர்களா எத்தனை குடும்பங்கள் குடியால் நாசமாய் போய்விட்டன. அரை வயிற்றுச் சோற்றுக்கே உழைப்புப் போதாமல் இருக்கும்போது குடியில் பணத்தை செலவு செய்தால் ஓட்டை எடுத்துக் கொண்டு பிச்சைக்குத் தான் போகவேண்டும்.

டேய், போதுமடா போ. நீ எனக்குப் புத்தி புகட்ட வந்திட்டியா என்றார் ஆனந்தனின் தந்தை.

பின் என்னப்பா செய்கிறது. பள்ளிக்கூடத்தில் என் உடையைக் கண்டு நண்பர்கள் ஏளனஞ் செய்கிறார்கள். 'பீஸ்' கொடாததால் வாத்தியார் மிரட்டுகிறார். கால்வயிற்றுக்கே உணவின்றி அம்மா கஷ்டமடைகிறார். நீங்கள் குடித்துக் கூத்தாடுகிறீர்கள். உண்ண உணவின்றி உருக்குலைந்துபோன அம்மாவின் உருவத்தைப் பாருங்கள். சொற்ப உணவையும் எங்களுக்கு தந்துவிட்டு பட்டினியால் வாடும் அம்மாவைப் பார்க்க உங்களுக்கு மனம் இளகவில்லையா?

உங்கள் ஒரேமகன் பாடசாலையில் ஏளனஞ் செய்யப்படுவதைக்காண உங்களுக்கு உள்ளம் வெதும்பவில்லையா? தனையர்களை சந்தோஷமாக வாழவைக்க வேண்டும் என்று படிப்பிக்கிறார்கள் லட்சிய தந்தைகள். நீங்கள் ஏன் இங்ஙனம் குடிவெறியில் காலத்தைக் கடத்துகிறீர்கள்.

வேண்டாம் மகனே வேண்டாம்! உணர்ச்சியற்ற என் உள்ளத்தை உருக்கிவிட்டாய் இனி ஒருகாலமும் குடிக்க மாட்டேன் என்றார் தந்தை. இதைக்கேட்ட ஆனந்தனும் தாயாரும் ஆனந்தம் அடைந்தனர்

வி. என். இரத்தினம்
கரவெட்டி கிழக்கு

## முஸ்லிம் முன்னேற்றச்சங்கம்

இம்மாதம் 2ந் தேதி கொழும்பு மாளிகாவத்தை ரோட் நிர் 21/71 இல்லத்தில் மேற்படி சங்கத்தின் விசேஷ மகாசபை கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் இம்மாதம் 29ந் தேதி நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் ஜயந்தியைவிமரிசையாகக் கொண்டாடுவதென்று முடிவு செய்யப் பட்டது.

## ஜம்மு காஷ்மீர் புதுத் தலைவர்

ஜம்மு-காஷ்மீர் மாகாணத் தலைவராக யுவராஜ கரன்சிங்கைக் குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டார். புதிய தலைவர் நவம்பர் 17ந் தேதி தமது பதவியை ஏற்பார் என்று மாகாண அமைச்சரவைப் பத்திரிகைக்குறிப்பு ஒன்று கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அதை வெளியிட்டார். ஆம், அதுதான் சரசாவுக்கு மாற்றம்! நாட்டுப் புறத்திலேயுள்ள ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு கலங்கிய கண்களுடன் "என்னை மறந்து விடாதீர்கள் உங்களுக்காக எவ்வளவு காலமென்றாலும் காத்திருப்பேன்" இரண்டே இரண்டு வார்த்தைகளுடன் சரசா என்னிடம் விடைபெற்றுக் கொண்டாள் அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை அந்த நிலையில்!

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி உருண்டு கொண்டிருந்தன. என் வாழ்வில் ஒரே அமைதி! சரசாவின் கடைசிக் கடிதம் அன்று வந்தது. கண்ணீரால் நனைத்து எழுதப்பட்ட கடிதம் அது. சென்ற நான்கு மாதங்களுக்குள் அந்த அபலைப் பெண்ணின் வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை விவரித்தது.

ராஜன் சரசாவின் தாயாருக்கு தூரத்து உறவு. அந்த நாட்டுப்புறத்திலே உள்ள ஒரு ஆங்கிலப் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியன் அவன் குறுக்கிட்டு சரசாவின் தாயாரை மாற்றி விட்டது! எங்கோ ஊர், பேர் தெரியாத என்னைக் காட்டிலும் அவனை மணந்துகொள்வது மிகவும் நல்லது என்று அவள் அடம் பிடித்திருக்கிறாள். சரசாவின் மறுப்பு அவள் தாயாருக்கு 'வெறி'யை உண்டாக்கிவிட்டது. "ராஜனை மணந்துகொள் இன்றேல் என்னைப் பிணமாகத்தான் காண்பாய்" சரசாவின் தாய் பயங்கரமாக உறுமினாள். இக்கட்டான நிலைமை ஒரு புறம் காதல்! மறுபுறம் கடமை!! காதலுக்கும் கடமைக்கும் போட்டா போட்டி. இறுதியில் கடமை வென்றது! ராஜன் சரசாவை மணந்துகொண்டான். சரசா ராஜனை மணக்க நேரிட்டது!"

கடிதத்தைப் புரிந்து கொண்டதும் நான் நீண்ட பெருமூச் சொன்று விட்டேன், கவலைகளையெல்லாம் வெளியே தள்ளுகிற நினைவில். மீண்டும் என் வாழ்வில் அமைதி – கோர அமைதி – மயானத்தில் நிலவுகிற மகா பயங்கர அமைதி!"

கோடைக்குப் பின்னே மாரி, மாரிக்குப் பின்னே கோடை மாறிமாறி வருவது இயல்புதானே. எனக்கு உத்தியோக மாற்றம் என்றதும் நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். ஒரே இடத்தில் நெடுக அமர்ந்திருப்பவனுக்குத் திடீர் எடுப்பதும்போல எனக்கும் அந்தக் கல்லூரி புளித்து விட்டது!

ஒரு சிங்களக் கிராமம்! அங்கு என்னை மாற்றிவிட்டார்கள். அங்கே நான் போனபோதுதான் நான் எதை விரும்பவில்லையோ அதை நான் கட்டிவிட்டேன் என்று தெரியவந்தது! எனக்கு உத்தியோக மான அந்தப் பாடசாலைக்கு தலைமை ஆசிரியனாக ராஜன் வந்திருந்தான்! கல்லூரியிலிருந்து பாடசாலைக்குப் போனதைப் போலத்தான் ஆட்டத்திலிருந்து சஞ்சலத்தை நோக்கி என் வாழ்வு நகர்ந்தது.

# சகோதரி

ராஜன் ஒரு ஆடம்பரப் பேர்வழி என்பதைப் பழகிய ஒருசில தினங்களுக்குள்ளேயே நான் அறிந்து விட்டேன். பாடசாலை ஓய்வான நேரங்களில் எல்லாம் அவன் மிதமிஞ்சிய 'குடி வெறி'யில் தத்தளித்துக் கொண்டிருந்தான். மதுவின் போதையில் அவன் அறிவு ஒளி வரவர மங்கிக் கொண்டிருந்தது எத்தனையோ முறை என்னைத் தன் வீட்டுக்கழைத்தான். பல முறை மறுத்தேன். ஆனால் மனித சுபாவத்தை மாற்றி நெடுங்காலம் மறுக்க முடியுமா?

ஒருமுறை அவன் வீடு சென்றேன். என்னை அழைத்துவிட்டு அவன் மதுவின் போதையில் எங்கோ போனவன் வர மறந்துவிட்டான் ஏகாந்தமான நிலைமையில் சரசா என்னைக் கண்டாள். என் கால்களைக் கட்டிக்கொண்டு அழுது தீர்த்தாள். மது போதையிலே ராஜன் தன்னைப் படுத்தும் பாடுகளைக் கூறி மனம் வெதும்பினாள் "நீ என் சகோதரி; அவனைத் திருத்தி நன்றாக வாழுதல் உன் கடமை" என்று புத்திமதி சொல்லிவிட்டு வீடு திரும்பினேன்.

"அண்ணா என் மனதில் ஒருவருக்குத்தான் இடம் உண்டு ஆனால்.........வழி தவறி நடக்கமாட்டேன். காலத்திற்கு வெம்பி விழும் கனியைப்போலத் துன்பச் சுமையினால் என்றோ என் உயிர் பிரிந்துவிடும். அதுவரையும் என்னை மறவாதீர்கள் அண்ணா! அடிக்கடி இங்கு வந்து போங்கள்.

அவள் வேண்டுகோளை என்னால் மறக்க முடியவில்லை. என் மனம்தான் ஏற்கனவே சலசித்தத்திற்குச் சாவுமணி அடித்துவிட்டதே. உண்மையான சகோதர பாசத்தோடு அவளுடன் பழகினேன் ஒத்தாசை செய்துவந்தேன்.

ஆனால்.........!

குருட்டுச் சமூகம்—அதன் கோர எண்ணங்கள், நேர்மையான உள்ளமுடைய ஒரு பெண்ணை எப்படி அணு,அணுவாய் அரித்துச் சாகாட்ட முடியுமோ அதற்கு இலக்காக முடிந்தது சரசாவின் வாழ்வு!!

பாடசாலையிலும், வீட்டிலும் அவளும் நானும் பழகிய விதத்தை சமூகம் சந்தேகக் கண்களுடன் பார்க்க ஆரம்பித்தது. மதுவின் போதையிலே மதியை இழந்த ராஜன் சரசாவைப் படாதபாடு படுத்தினான் கணவன் என்ற உரிமையினால் அதன் விளைவு.....?

ஒருநாள் முரட்டுக் கணவனையும் அன்புத் தமையனையும் உயிர்ச் சகோதரனாகிய என்னையும் பிரிந்து சரசா எங்கோ ஓடிவிட்டாள்!

எங்கே......? தெரியாது! ஆனால் திரும்பிவர முடியாத உலகிற்கு என்பது பலர் அபிப்பிராயம் உண்மையும் அதுதான்!!

* *

எனக்கு உலகமே வெறுத்துவிட்டது. உத்தியோகத்தையும் ராஜினாமாச் செய்துவிட்டு எங்கெல்லாமோ சுற்றினேன்; எங்கெல்லாமோ அலைந்து கிடந்தேன. இப்பொழுது மீண்டும் நாடோடியாக வாழ் நாளை கழிக்கின்றேனே?

கதை சொல்வதை நிறுத்தினான் வாலிபன்.

* *

ரயில் ஒரு நீண்ட பெருமூச் சொன்றை தரலாக ஒலித்துவிட்டு நின்றது. தலையை வெளியே நீட்டிப் பார்த்தேன் சனங்கள் நெக்கியடித்துக்கொண்டு ஏறுவதும், இறங்குவதுமாக இயங்கிக்கொண்டிருந்தனர் "நான் இங்கே இறங்கப் போகிறேன் ஸார்" என்று சொல்லிவிட்டு,கைப்பெட்டியையும் தலையணையையும் தூக்கிக்கொண்டு பதிலுக்குக் காத்திராமல் நெருங்கிநின்ற சனத்திரளினூடே மறைந்தான் வாலிபன். அவன் கதையும், தோற்றமும், சுபாவமும் எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. நெடுநேரம் விழித்திருந்து கதை கேட்ட அலுப்பு கண்ணை மூடியது. 'லீட்'டில் படுத்துத் தூங்க ஆரம்பித்துவிட்டேன். எவ்வளவு நேரம் தூங்கினேனோ எனக்குத் தெரியாது. நான் கதைகேட்டுக்கொண்டிருந்தபோது தூங்கிக் கொண்டிருந்த பெரியவர் என்னைத் தட்டி எழுப்பினார் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதென்று.

சோம்பல் முறித்துக் கொண்டு எழும்பிய என்னை யாழ்ப்பாண ஸ்டேஷன் வரவேற்றது பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு இறங்கி நடந்தேன் பத்திரிகைக்காரப் பையனின் குரல் பின்னுக்கிழுத்தது. ஒரு பத்து சதக் 'குத்தி'யை விட்டெறிந்துவிட்டு பத்திரிகையை வாங்கிப் புரட்டிப் பார்த்துக்கொண்டே நடந்தேன். முதற்பக்கத்தில் காட்சியளித்த புகைப்படம் என்னை ஒரு குலுக்குக் குலுக்கியது! யாருடைய கதையை இரவு முழுவதும் கேட்டுக் கொண்டிருந்தேனோ அவருடைய புகைப்படம்தான் அது. அதன் கீழே கொட்டை எழுத்துக்களில் பின்வரும் செய்தி பிரசுரமாகியிருந்தது:

'சித்தப்பிரமையினால் பீடிக்கப்பட்டிருந்த பிரபல எழுத்தாளர் சொஸ்தமானார்!"


"பைத்திய ஆஸ்பத்திரியினின்றும் வெளியேற்றப் பட்டார் !!"

—கொழும்பு, அக். 20

இலங்கையின் பிரபல தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரும் கடந்த மூன்று வருடங்களாக அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்தவருமான திரு "ஸ்ரீராமன்" நேற்றுப் பிற்பகல் நான்கு மணிக்கு பைத்திய ஆஸ்பத்திரியினின்றும் பூரண சொஸ்தமடைந்தவராய் வெளியேற்றப்பட்டார். அவரை நமது நிருபர் பேட்டி கண்டபோது "தாம் இனிமேல் சுயேச்சையாகத் தமிழ்த் தொண்டு செய்து திரிய விரும்புவதாகவும், பழையபடி ஆசிரியத் தொழிலில் ஈடுபட விருப்பமில்லையென்றும்" கூறினார். அவர் வெளிப்பாடு தமிழ் இலக்கியத்திற்குள்ள மகத்தான அதிர்ஷ்டத்தையே குறிக்கிறது

செய்தியை வாசித்து முடிந்ததும் என் தலைசுழன்றது. இத்தகைய ஒரு மகா மேதையா இரவு முழுவதும் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார் என்று எண்ணும் போதே என் மனம் மகிழ்ந்தது உடனே "பிரபல எழுத்தாளருடன் ஒரு இரவு" என்ற கட்டுரையை எழுதி எனது பத்திரிகைக்கனுப்ப விரைந்து நடந்தேன்.

(யாவும் கற்பனை)



19 வயதுள்ள [illegible] அவருடைய 'வளர்ப்பு[illegible]' 8 வயதுச் சிறுவனும்— அச்சிறுவன்! ஓர் கொரிய அனாதை.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரேநாளில் அறிந்துகொள்ளலாம்
நிர். 174 ஆனந்தா வைத்தியசாலை
என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாக கழித்து, அசதி, சோம்பல், மேல்கால் கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள் சொறி, தேமல் நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை பெரியது ரூ. 5-75 சிறியது விலை ரூ 3-00 இத்துடன் "ஆனந்தா கீழ்காய்நெல்லித்தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்புவோம்.

பெரிது ரூ 5-75 சிறியது ரூ 3-00 வி.பி.பி. செலவுவேறு


புரொப்ரைட்டர்:- M. பொன்னையா
ஆனந்தா வைத்தியசாலை
நிர். 174 C, செட்டியார் தெரு, கொழும்பு-11

# வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிங்ஸ்லி [கொழும்பு] 6-வது வாரம் ! வெலிங்டன் [திரிகோணமலை]

# கல்யாணம் பண்ணிப்பார்



தர்மத்தால் தனமிழந்த ஜமீந்தார் நடத்திய
தர்மக் கல்யாணத்தால் அஞ்ஞாதவாசம் செய்ய
நேர்ந்த அற்புத திரை ஓவியம்!

கல்யாணமும் ஹாஸ்யமும் கலந்து உறவாடும்
கண்கவர் சித்திரம்!

பல்லாயிரம் ரசிகர்கள் பாராட்டும்
பாங்கான ஓவியம்.

அனைவரும் பார்க்கவேண்டிய..............
கூத்துக் கொம்மாளமும், ஹாஸ்யமும், கருத்தும்
பொங்கி நிறைந்த
புதுமைச் சித்திரம்

நடிகர்கள்:
என். டி. ராமராவ், ஜி. வரலக்ஷிமி,
கிருஷ்ணராவ், சாவித்திரி.



காமினி திரையில்
"ச லோ னி"
(ஹிந்தி)
நளினிஜயவந்த், அசோக்குமார்
நடித்தது

★ ★ ★

மைலன் திரையில்
ஜகதலப் பிரதாபன்
(தமிழ்)
பி. யு. சின்னப்பா, சரோஜினி
நடித்தது.

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 186ம் [illegible] சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் சார்பில் 194, தட்டா[illegible] அச்சகத்தில் பதிப்பித்து 1952 நவம்பர் 23ந்தேதி பிரசுரம்செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org